www.tamilarangam.net

# களத்தில்

> *எமது மண்ணின் விடுதலைக்காக யார் போராடுகிறார்களோ அவர்களே இந்த மண்ணின் மைந்தர்கள். எமது மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும் இம் மண்ணை ஆள அருகதையற்றவர்கள்.*
>
> – லெப். கேணல் திலீபன்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (10.09. 1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (143) அன்பளிப்பு: 60 p

# சிங்கள இராணுவத்தின் வெறித்தனம் - ஆறுவயது சிறுமி மீது பாலியல் வல்லுறவு

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டில் – தொடரும் இராணுவ ஆட்சியில் – பல காட்டுமிராண்டித்தனச் செயல்களில் மீண்டுமொரு ஈனத்தனமான சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த ஆறு வயதுடைய சிறுமி சோதனைச் சாவடியில் நின்றிருந்த இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். வலிகாமம் கிழக்கில் உள்ள அச்சுவேலியில், கதிரிப்பாய் எனும் இடத்தில் இக் கொடூரச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:

இம் மாதம் 2ஆம் திகதி அன்று, காலைவேளை பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த பாலந்தி எனும் ஆறு வயதுடைய சிறுமியை கதிரிப்பாயில் உள்ள காவலரணில் தடுத்து நிறுத்திய சிங்கள இராணுவத்தினர், அச் சிறுமியை காவலரணுக்கு உள்ளே இழுத்துச் சென்று கூட்டான பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி கொடுமை புரிந்துள்ளனர்.

நாகரீக உலகத்தை வெட்கித் தலைகுனிய வைக்கும் இவ் ஈனத்தனமான செயலால், பாலந்தி எனும் அச் சிறுமி ஆபத்தான நிலையில் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிங்கள இராணுவக் காடையரின் வெறித்தனமான இச் செயலினால்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## மூன்றாவது ஈழப்போரில் சிறிலங்காவுக்கு அதிக உயிரிழப்பு

**- விடுதலைப் புலிகளின் தலைமையகம் அறிவிப்பு**

சிறிலங்காப் படைகள், மூன்றாவது ஈழப்போர் தொடங்கப்பட்ட பின்னரே மிக அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ளனர் என விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடச் செய்திக் குறிப்பு, தகவல் வெளியிட்டுள்ளது.

முதலாவது ஈழப்போர் காலகட்டத்தில் 794 சிறிலங்காப் படையினரை சிறிலங்கா இழந்தது. இரண்டாவது ஈழப்போர் நடைபெற்ற நாலரை ஆண்டு காலததில் 5500க்கும் அதிகமான படையினரை சிறிலங்கா பறிகொடுத்தது. ஆனால், மூன்றாவது ஈழப்போர் தொடங்கியது முதல் இம் மாதம் வரை 6500க்கும் கூடுதலான சிறிலங்கா

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## "இறைமையை நிலைநாட்டவே போர் தமிழர் அரசு சிங்கள அரசின் உப அரசே"

- ✷ அநுராதபுரத்தில் சந்திரிகாவின் வரலாற்று திரிபு
- ✷ தனது ஆட்சிக்குள் வடக்கு-கிழக்கை கைப்பற்றச் சபதம்

தனது அப்பட்டமான ஆக்கிரமிப்புப் போரை நியாயப்படுத்த, "சமாதானத்திற்கான போர்", "புலிகளிடம் இருந்து தமிழர்களை விடுவிக்கவே போர்" என்றெல்லாம் பொய்யுரை பகர்ந்து தமிழர்களுக்காக களமாடப் புறப்பட்ட சமாதானப் புறாவாக நன்றாக நடித்த சந்திரிகா, அநுராதபுரத்தில்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## நான்கு நாள் அமைதி காப்பு - தேசியத் தலைவர் அறிவிப்பு

சிறுவர்களுக்கு போலியோ தடுப்பு ஊசி வழங்கும் மருத்துவத் திட்டத்துக்காக, நான்கு நாள் அமைதி காக்கும்படி 'யூனிசெவ்' ஐ. நா. நிறுவனம் விடுத்த வேண்டுகோளைத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார். மேற்படி நிறுவனம், சிறிலங்கா அரசும் தங்களின் மேற்படித் திட்டத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிவித்துள்ளது. இதன் அடிப்படையில் இம் மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளிலும், அடுத்த மாதம் 10ஆம், 11ஆம் திகதிகளிலும் அமைதி காக்கப்படவுள்ளது.

கடந்த இரு ஆண்டுகளிலும் (1995, 1996) இதே போன்ற வேண்டுகோள் யூனிசெவ் அமைப்பினால் விடுக்கப்பட்ட நேரங்களிலும், விடுதலைப் புலிகள் இயக்கம் பூரண ஒத்துழைப்பை அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும், கடந்தாண்டு இந்த அமைதிகாப்பு நேரத்தில் சிறிலங்காப் படையினர் இதனை மீறியமையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மறைந்திருந்து தாக்கி மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தமையும் சிறிலங்காவின் நீதி – நேர்மையற்ற தன்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. ✷



மக்கள் வேறு புலிகள் வேறு எனச் சொன்னது யார்?

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamilarangam.net



# "நாமே மனித உருவிலுள்ள தெய்வங்கள் எமக்கு மரியாதை செலுத்துங்கள். தவறின் கடும் தண்டனை வழங்கப்படும்"

- சிங்களப் படையினர்

சிறிலங்காப் படையினர் பகிரங்கமாகவே தமது சர்வாதிகாரத்தனத்தை அக்கிரமித்துள்ள பல பிரதேசங்களிலும் வெளிப்படுத்தி வருகின்றனர். பொது மக்கள், இராணுவ சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்லும் போது அங்கு உள்ள சிங்களச் சிப்பாய்களுக்கு மரியாதை செலுத்த வேண்டுமென பணிக்கப்படுகின்றனர்.

படையினரைக் கண்டவுடன், மடித்துக் கட்டிய வேட்டியினை அவிழ்த்து நீளக் கட்டுதல், கையெடுத்துக் கும்பிடுதல், தொப்பி போட்டிருந்தால் அதனைக் கழற்றி கையில் எடுத்தல், சைக்கிளில் சென்றால் அதிலிருந்து இறங்கி நடந்து செல்லுதல் இவ்வாறாக மரியாதைகள் செய்யப்பட வேண்டும். இதனை செய்யத் தவறுபவர்கள், சிங்களப் படையினரால் மிகவும் கீழ்த்தரமாகவும், கடுமையான முறையிலும் தண்டிக்கப்படுகின்றனர்.

மட்டக்களப்பில், தொப்பி அணிந்து சென்ற தமிழ் மாணவர்கள் அறுவர், இராணுவத்தினர் முன்பாக தொப்பிகளைக் கழற்றவில்லை எனும் காரணத்திற்காக, கடுமையாகத் தாக்கப்பட்டு ஒரு நாள் முழுவதும் கொதிக்கும் வெய்யிலில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

"நாம் மனித உருவில் உள்ள தெய்வங்கள். எமக்கு வணக்கம் செலுத்த வேண்டும். இதனைச் செய்யத் தவறின் இதுதான் தண்டனை" என மேற்படி மாணவர்களிடம் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில் மாத்திரமல்ல, யாழ் குடாநாடு, மன்னார், வவுனியா நகர்ப்பகுதி என பல பகுதிகளிலும் இவ்வாறான இராணுவ சர்வாதிகாரச் சட்டங்கள் தமிழ் மக்களை பெரும் நெருக்கடிகளிற்கு உள்ளாக்கி வருகின்றன.

யாழ். குடாநாட்டில் இராணுவக் கெடுபிடிகள் அதிகரிக்கின்றன. இரவு நேரத்தில் மக்கள் வீட்டைவிட்டு ஏதாவது தேவைகளுக்கு வெளியே செல்வதானால், வெள்ளை ஆடை அணிந்து கையில் விளக்குடன் நடந்து சென்று சோதனைச் சாவடிக்கு 50 மீற்றர் தூரத்தில் நின்று தமக்கு அனுமதிப்பத்திரம் வேண்டும் என உரக்கக் குரல் கொடுக்க வேண்டுமென படையினரால் உத்தரவிடப்பட்டுள்ளனர். வெள்ளை ஆடையற்றோர் தெருவில் இறங்கமுடியாத நிலையும் விளக்கு அணைந்தால் துப்பாக்கிச் சூடு விழும் அபாயத்தினையும் மக்களை எதிர்கொண்டுள்ளதாக யாழ். செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் யாழ். குடாநாட்டில் வெள்ளை ஆடைகளிற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

குடாநாட்டுக்குள் விடுதலை புலிகள் பெருமளவில் ஊடுருவியுள்ளனர் எனும் அச்சமே இராணுவத்தினரின் இப் புதிய உத்தரவிற்கான காரணம் எனவும், சிறுமுகாம்கள் அடிக்கடி இடம்மாற்றப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், வேம்படிச் சந்தி சோதனைச் சாவடி தற்போது தொலைத் தொடர்பு நிலையச் சந்திக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் ஸ்ரான்லி வீதி பெற்றோல் நிலைய சோதனைச் சாவடி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இச் சாவடிகளில் சோதனை எனும் நோக்கைவிட, பெண்கள் மீதான பாலியல் சேட்டைகள் எனும் நோக்கே சிங்களப் படையினரின் பெருநோக்காக உள்ளதென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். ■

# பொதுமகன் படுகொலை மக்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திருக்கடலூர் என்ற கிராமத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்காப் படையினர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் இருபத்திமூன்று வயதான இலட்சுமிகாந்தன் தமயந்தன் என்ற பொதுமகன் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் பல பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்ட பொதுமகனின் பெற்றோரிடம், அவர்களது பிள்ளை 'விடுதலைப் புலி' என கையெழுத்திட்டுத் தருமாறு சிங்களப் படையினர் வற்புறுத்தியுள்ளனர். இதனை வன்மையாக ஆட்சேபித்த அவரின் பெற்றோர்கள் கையெழுத்திட மறுத்திவிட்டனர். இதனைக் கேள்வியுற்ற ஊர் மக்கள் சிங்கள படையினரின் இவ் அநியாயமான செயலைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். இவர்களைக் கலைக்கவென சிங்களப் படையினர் வான்நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். ஆயினும் அதற்கும் அசைய மறுத்து உறுதியாக மக்கள் தம் எதிர்ப்பைத் தெரிவித்ததையடுத்து, படுகொலை செய்யப்பட்ட இளைஞனின் உடலை விட்டுவிட்டு படையினர் சென்றதையடுத்து பெற்றோர் அவரது உடலை எடுத்துச் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## சிறிலங்காவை. . . .

அரச சார்பற்ற நிறுவனங்கள், சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகளை, தமிழர்களுடைய பாரம்பரிய தாயகத்திலிருந்து வெளியேற்றும்படி கோரியமை, தமிழர்களை இனஅழிப்புக்களில் இருந்து காப்பாற்றுவதற்கு மட்டுமல்லாமல் – தேசிய இனங்களுக்கிடையேயான பிரச்சினைகளிற்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளின் முக்கிய வெளிப்பாடாகவே உள்ளது.

பேச்சுவார்த்தையானது, பகுதிகள் ஆக்கிரமிப்பில் உள்ளபோது இடம்பெற முடியாது. அச்சுறுத்தல் உள்ள நிலையில் எந்த சமூகமான உடன்படிக்கைகளும் உருவாக்கப்பட முடியாது. ஒப்பந்தச் சட்டப்படி கூட பலவந்த நிலையில் மேற்கொள்ளப்படும் எந்த ஒப்பந்தமும் செல்லுபடியாகாது. எனவே, இருதரப்பினரும் சமத்துவமானமுறையில் சுதந்திரமான உணர்வுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இருதரப்பினரும் தங்களுடைய அரசியல் சுயமரியாதையை மதிக்கக்கூடிய தன்மை தேவை. இத்தகைய சூழலைக் கொண்ட பேச்சுவார்த்தையே ஏற்புடைய நிரந்தரத் தீர்வை விளைவிக்கும். சுயநிர்ணய உரிமை, மனித மாண்புகளை மதிப்பதற்கான ஜனநாயக ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான கருவி. எனவே, சுயநிர்ணய உரிமை ஏற்கப்பட வேண்டிய முக்கியமான ஒன்றாகவே உள்ளது. ■

# சிறிலங்காவை விசாரணை செய்ய போர்க்குற்ற நீதிமன்றத்தினை அமைக்குக!

**- ஐ.நா. மனித உரிமைக் குழுவிடம் கோரிக்கை -**

"ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம், சிறிலங்காவை விசாரிக்கவென போர்க் குற்ற நீதிமன்றை அமைக்கும்படி சிபார்சு செய்யும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும்படி ஐ.நா. மனித உரிமைகள் உப ஆணைக்குழு ஆகிய உங்களிடம் வேண்டுகின்றோம்" என சர்வதேச மனிதநேய சட்டங்களுக்கான அமைப்பு அறிக்கை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் உபஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

இவ்வமைப்பானது, "உணவை ஆயுதமாக்குவது சர்வதேசக் குற்றச் செயல்" என்பதை எடுத்து விளக்கி, 1949ஆம் ஆண்டு, ஜெனிவா சாசனப்படி, பட்டினியை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவது, சாசனத்தின் விதியை மீறுவதாக உள்ளது. சிறிலங்கா இந்தச் சாசனத்தில் கையொப்பம் இடாத போதிலும், சர்வதேச சட்ட வழமைகள் சிறிலங்காவையும் இந்த விதிக்கு கட்டுப்படுத்துகின்றன.

அவ்வாறே 1919ஆம் ஆண்டின், பாரிஸ் சமாதான மாநாடு "பொதுமக்களைத் திட்டமிட்ட வகையில் பட்டினிக்கு உட்படுத்துவதை போர்க் குற்றச் செயலாகவே கருதுகின்றது. தமிழர்களை தேசிய இனம் அற்றதாக்கும் உள் நோக்குடன் தமிழர்களிடையே போசாக்கின்மையையும், பட்டினிச் சாவையும் ஊக்கப்படுத்தும் வகையில் செயற்படும் சிறிலங்கா இனஅழிப்புக் குற்றவாளியாகக் இனம்காணப்படுகின்றது.

சிறிலங்கா, ஈராக்குக்கு அடுத்ததாக, உலகில் அதிக எண்ணிக்கையான 'காணாமல் போனோரின்' பதிவுகளைக் கொண்ட நாடாக காணப்படுகின்றது. அத்துடன் 1997ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க அகதிகள் குழுவின் அறிக்கையும், இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் காணாமல் போதல் மிகமிக அதிகமாக உள்ளதை உறுதிப் படுத்துகிறது. மேலும், 1997 சித்திரையில், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 53வது ஜெனிவா அமர்வும், யாழ்ப்பாணத்தில் 700க்கு மேற்பட்ட மக்கள் காணாமல் போயுள்ளமை தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாக உள்ளது என்பதை உறுதி செய்கிறது. காணாமல் போதல், சர்வதேச மனித உரிமைகள் சாசன விதிப்படியும், அமெரிக்க வெளியுறவுச் சட்ட பிரகடனத்தின் மூலமும், 'சர்வதேசச் சட்டங்களை வன்முறைப்படுத்தும்' செயலாகக் கருதப்படல் வேண்டும்.

அவ்வாறே, முன்னாள் யுகோஸ்லாவியா குறித்த போர்க் குற்ற விசாரணை நீதிமன்று பாலியல் வல்லுறவையும் சர்வதேச போர்க் குற்றச் செயலாக இனங்காட்டுகிறது. சிறிலங்கா, தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு வன்முறைகளில் முதன்மை வகிக்கிறது.

இவைகளின் பின்னணியில் சிறிலங்காவின் போர்க் குற்றச் செயல்களை விசாரணை செய்ய, சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றை அமைக்கும்படி, ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு சிபார்சு செய்யுங்கள் என உப ஆணைக்குழுவாகிய உங்களை வேண்டுகிறோம்.

மேலும், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவிடம் பங்குனி 97இல்

தொடர்ச்சி கடைசி பக்கம்

தமிழர் புனர்வாழ்வுக்கழக யேர்மனிக் கிளை நடாத்தும்

விடுதலை கானம் பாடி
- 1997 -

சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி

இடையிடையே உங்களை நகைச்சுவையில் நனைக்க
இடைச்சிரிப்பு
வழங்குபவர் விகட வீற்பனர் ஐசாக் இன்பராஜா

இடம்:
Universitat - Alte PH
Henri - Dunant Str. 65
45131 Essen

காலம்:
13-09-97
சனிக்கிழமை
15:00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
யேர்மனிக் கிளை

www.tamilarangam.net





## உண்மைகள் ஏற்கப்படல் வேண்டும்

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் பகிரங்க இனஅழிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். இராணுவ வேலிகளும் இராணுவ முற்றுகைகளும் தமிழ் மக்கள் மீதான முற்றுகையாகவே காட்சி தருகின்றன. தமிழ் மக்கள் மனிதர்களாகவே மதிக்கப்படுவதில்லை. சிறிலங்காவால் மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் தமிழ்ச் சமுதாயத்தின் மேல் தாராளமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மாணவி கிரிசாந்தி முதற்கொண்டு 4 பிள்ளைகளின் தாயான கோணேஸ்வரி வரை எத்தனையோ தமிழ்ப் பெண்கள் மீது சிறிலங்காப் படைகளின் பாலியல் வல்லுறவுகள் காட்டுமிராண்டித்தனமாக நடாத்தப்படுகின்றன. எத்தனையோ சம்பவங்கள் இன்னமும் வெளிச்சத்துக்கு வராமல் உள்ளன. அதேவேளை, இறுக்கமான இராணுவ நெருக்குதல்கள் மத்தியில் தினம் தினம் தொடர்ந்து கொண்டிருக்கும் எண்ணுக்கணக்கற்ற மனித வதைகளில் சிலவே வெளியாகின்றன – பல மறைக்கப்பட்டு விடுகின்றன என்ற உண்மையையும் எடுத்து நோக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், இராணுவ சர்வாதிகார ஆட்சி ஒன்று தமிழ் மக்கள் மீது, அந்நிய ஆட்சியாளர் வழங்கிய 'சட்டபூர்வ அரசு' என்ற தகுதியைத் துஸ்பிரயோகம் செய்வதின் மூலம் சிறிலங்காவால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ் மக்களின் இயல்பான வாழ்வுக்கு, உயிரைப் பாதுகாக்கும் உரிமைக்கு, மனித உரிமைகள் அனைத்துக்கும் அச்சுறுத்தலாக – ஆயுதப் பயமுறுத்தலை அடக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்தும் சிங்கள இராணுவம் விலக்கப்படுவதன் மூலம் மட்டுமே தமிழ் மக்களின் உயிர் வாழும் உரிமை உட்பட அடிப்படையான மனித உரிமைகள் திரும்பக் கிடைக்கும். இந்தவகையில், இராணுவ விலகலுக்கான கோரிக்கை என்பது, ஒரு அரசியல் கோரிக்கையோ – இராணுவக் கலகமோ அல்ல! தமிழர்கள் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்தலுக்கான தேவையாகவே அது உள்ளது. இந்த உண்மை, சர்வதேச சமூகத்தால் உணரப்பட்டு சர்வதேசச் சட்டங்களையும், வழமைகளையும் பகிரங்கமாக வன்முறைப்படுத்தும் சிறிலங்காவின் மீது, அதனுடைய ஆக்கிரமிப்புப் படைகளை விலக்கி, மக்கள் மீதான முற்றுகையையும் மக்கள் மீதான போரையும் நிறுத்தும்படி, சர்வதேச நாடுகளும் சர்வதேச மக்களும் அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை உலக மக்கள் சமுதாயத்தின் கடமையாக மாறிவருகிறது. இந்தப் பெரும் பொறுப்பு, உலக மக்களுக்கு உண்டு என்பதையும், படை விலகல் இல்லாத எச்சமாதான முயற்சியும் இலங்கைத் தீவில் அமைதியை ஏற்படுத்தாது என்பதையும் எடுத்துரைக்க வேண்டிய தேசக் கடமை, புலம்பெயர் வாழ் தமிழீழத்தவர்களின் முக்கிய இனக் கடமையாகவுள்ளது.

இதேவேளை, தமிழ் மக்களின் தேசிய இயக்கமான விடுதலைப் புலிகளை தமிழர்களின் பிரதிநிதிகளாகக் கருதாது, தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து அவர்கள் சொல்லும் கருத்துக்களை ஏற்காது, விடுதலைப் புலிகளை ஓர் ஆயுதக் குழுவாக அல்லது பயங்கரவாத இயக்கமாகக் காட்டமுற்படுவது சிறிலங்காவின் திட்டமிட்ட சதியாகும். இது பிரச்சினைக்கான தீர்வு யோசனை பரிணமிப்பதைத் தடுக்கும் சிறிலங்காவின் தந்திரோபாயச் செயற்பாடு.

எனவே, இதனை உடைத்தெறிந்து, தமிழீழ மக்களும் உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, தமிழீழ விடுதலைப் புலிகளே – தமிழீழ மக்களின் தேசிய இயக்கம் என்பதனை உலகுக்கு உணர்த்திட வேண்டும்.

அத்துடன், ஒடுக்கப்படும் மக்களுக்காக – அவர்களின் விடுதலைக்காகப் போராடும் அமைப்புக்கு உதவிகளும் – உறுதுணையும் அளிப்பது சர்வதேச சட்டங்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. நாம் எவ்வளவு தூரத்துக்கு இதில் எமது பங்களிப்பை விரைவுபடுத்துகிறோமோ அவ்வளவு தூரத்துக்கு தமிழர்கள் மீதான சிறிலங்காவின் ஆக்கிரமிப்புப் பிடி விலகி, அதன் மனிதக் கொலைப் படைகள் அகன்று எமது மக்கள் பாதுகாப்பான அமைதி வாழ்வு பெறுவர். ✳

# தரைப் பாதையின் போரியல் நோக்கம்

வவுனியா – கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றி குடாநாட்டிற்கு ஒரு தரைப்பாதை சமைத்திட சிங்கள அரசு முயற்சிக்கின்றது.

'வெற்றி உறுதி' என்ற பெயரில் அதற்கான இராணுவ நடவடிக்கையையும் அது ஆரம்பித்துவிட்டது. ஓமந்தையூடாக புளியங்குளத்திற்கு அண்மையான சுமார் 14 கீ.மீ. நெடுஞ்சாலையைச் சிங்களப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 65 கீ.மீ. நீளமுள்ள இந்த நெடுஞ்சாலை முழுவதையும் இராணுவக் பிடிக்குள் கொண்டு வருவதன் மூலம் பாரிய இராணுவ நலன்களை அடைய சிங்கள அரசு ஆவல் கொண்டுள்ளது. அத்துடன், பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளும் இந்த நெடுஞ்சாலை கைப்பற்றப்படலில் அடங்கியிருக்கின்றது.

தமிழரின் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்ற 83ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இன்றுவரை குடாநாட்டுடனான தொடர்பை சிங்கள அரசு, பெரும்பாலும், இழந்து வந்திருக்கின்றது. அதேநேரம், வடபுலத்தைத் தனது ஆளுகை மண்டலத்திற்குள் கொண்டுவந்த விடுதலைப் புலிகள் இயக்கம் அங்கே, ஒரு நிழல் நிர்வாகத்தையும் – நிழல் அரசையும் ஏற்படுத்தியிருந்தது. சிங்கள அரசின் எந்த ஒரு அரசியல் அதிகாரமும் வவுனியாவுக்கு அப்பால் செல்லாக்காசாகவே இருந்தது. சிங்கள ஆட்சியாளர்களின் அரச விஜயங்களும் வவுனியாவுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. அதுவும், 90ஆம் ஆண்டிலிருந்து குடாநாட்டிற்கான நேரடித் தொடர்பு முற்றுமுழுதாகவே அறுந்து கிடந்தது. இவை காரணமாக, வடபுலம், குறிப்பாக, யாழ். குடாநாடு ஒரு தனிநாடு என்ற மனப்படிமம் சிங்களவர் மனங்களில் படியத் தொடங்கியது. தீவு முழுவதும் சிங்களவருக்கே சொந்தம் என்ற பேரினவாத அரசியல் நிலைப்பாடு, இதனால் பெரும்பாதிப்பிற்கு உள்ளானது.

இத்தகைய புறச்சூழலிலேயே குடாநாட்டை ஆக்கிரமிக்க அரசு முடிவெடுத்திருந்தது. அந்த ஆக்கிரமிப்புச் சமரில் புலிகளை அழித்து மேற்குறித்த நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளியிட சந்திரிகா அரசு தீர்மானித்தது. படைபலத்தை ஒன்றுகுவித்து – பிரமாண்டமான அளவில் படைக்கல சக்தியைப் பயன்படுத்தி, குடாநாட்டை, தனது இராணுவப் பிடிக்குள் எடுத்தது. குடாநாட்டை ஆக்கிரமித்த பின்னும் அரசு எதிர்பார்த்ததுபோல – முன்னைய அரசியல் – இராணுவ நிலைகளில் பாரிய மாற்றங்கள் நடைபெறவில்லை. மாறாக, குடாநாட்டில் குவிக்கப்பட்ட பெரும்படைக்கான இராணுவ விநியோகங்கள் அரசுக்கு புதியதொரு சுமையாக மாறிவிட்டன.

குடாநாட்டிற்கான வான்வழிப் பயணம் முடங்கிப் போயுள்ள இன்றைய சூழ்நிலையில், கடல் வழிப்பாதை, சிரமமும் – அபாயமும் நிறைந்ததாகிவிட்ட இன்றைய நிலையில் ஒரு தரைவழிப் பாதை அரசுக்கு இன்றியமையாத தேவையாகிவிட்டது. அதாவது, குடாநாட்டில் அகலக்கால் பரப்பி நிற்கும் இராணுவப் பூதத்திற்கு ஒரு தொப்புள்கொடி அவசரமாகத் தேவைப்படுகின்றது. வவுனியா – கிளிநொச்சி நெடுஞ்சாலையை இராணுவத் தொப்புள் கொடியாகப் பயன்படுத்தி குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவப் பூதத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்க அரசு விரும்புகின்றது. அதேவேளை, குடாநாட்டிற்கு நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி தீவு முழுவதும் சிங்கள ஆளுகைக்குள் வந்துவிட்டது என்று காட்டி பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளையும் நிறைவேற்ற அரசு துடிக்கின்றது.

நெடுஞ்சாலையைக் கைப்பற்றி இராணுவப் பாதை அமைப்பது சாத்தியமா? என்ற கேள்வி ஒருபுறம் இருக்கட்டும். . . . . பாதை அமைக்கப்பட்டால், அது தமிழினத்தின் வாழ்வை – தமிழர் போராட்டத்தை எவ்விதம் பாதிக்கும் என்று பார்ப்பது அவசியம்.

ஆட்தொகையிலும் – மரபுப்போர் ஆயுத வளத்திலும் சிங்களப் படைகள் பலத்துடன் இருந்தாலும், தேவையானபோது அவற்றை விரைவாக ஒருங்குதிரட்டிப் பயன்படுத்த சிங்களப் படைத்துறைத் தலைமைக்கு, சில தடைகள் இருக்கின்றன. பூகோள நிலையும் – புலிகளின் பலமும்தான் அந்தத் தடைகள்.

குடாநாட்டில் ஒரு தொகுதிப் படை – மன்னாரில் ஒரு தொகுதிப் படை – சிங்கள தேசத்தில் ஒரு தொகுதிப் படை – என்று சிறிலங்காப் படை பரந்து கிடக்கின்றது. விரைவான ஒருங்கிணைப்பும், வேகமான நகர்வும் ஒரு படையின் வெற்றிக்கு மிக அவசியம். தமிழீழக் கடலும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளும் இந்த ஒருங்கிணைப்பிற்கும் – நகர்விற்கும் சவாலாக நிற்கின்றன.

வவுனியா – கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றி சிங்கள தேசத்தைத் தரைவாயிலாக குடாநாட்டுடன் இணைத்துவிட்டால் மேற்குறித்த தடைகள் தகரும் என்று அரசு எதிர்பார்க்கின்றது. தேவைக்கேற்ப, இந்தப் பாதை வழியே வடக்கிற்கும் – வடக்கிற்கு வெளியேயும் துருப்புக்களை விரைவாக ஒருங்கிணைத்து – நகர்த்த படைத்தலைமைக்கு வாய்ப்பேற்பட்டுவிடும். இது, தமிழினத்திற்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஒரு இராணுவ அம்சமாகும். தமிழரின் தாயக நிலப்பரப்பை கூறுபோட்டுச் சிதைக்கும் பேரினவாத நோக்கமும் இதில் அடங்கியுள்ளது.

இவ்விதம், தனது இராணுவ – அரசியல் நலன்களை வென்றெடுக்கும் நோக்குடன் அரசு பாதை திறக்க முயலும்போது, கூட்டணியின் ஆனந்தசங்கரி போன்ற சில தமிழினத் துரோகிகள் அதை "தமிழ் மக்களுக்கான வரப்பிரசாதம்" என்று திரித்துக்காட்ட முற்படுகின்றனர். வடபுலத்தின், விவசாய – கடல்சார் உற்பத்திகளை தென்பகுதிக்கும், தென்பகுதியிலிருந்து இறக்குமதிப் பொருட்களை வடபகுதிக்கும் அனுப்பி தமிழ் மக்களுக்கு நன்மை செய்யவே பாதை திறக்கப்படுகின்றது என்ற பாணியில் அவர்கள் பிரச்சாரம் செய்து பேரினவாதத்திற்கு வால் பிடிக்கின்றனர். இந்தத் துரோகிகளின் பிரச்சாரத்திற்கு வலுச் சேர்ப்பதுபோல் "குடாநாட்டின் அபிவிருத்திக்காக சீமெந்து போன்ற பொருட்களைக் கொண்டு செல்லவே தரைப்பாதை" என்று அரசும் ஒத்து ஊதுகின்றது.

அன்று, சந்திரிகா அரசுடனான பேச்சுவார்த்தையின்போது, தமிழ் மக்களின் போக்குவரத்து வசதிக்காக, பூநகரி முகாமை அகற்றி, ஒரு தரைப்பாதை திறக்கும்படி கேட்டபோது அரசு அதற்கு மறுத்துவிட்டது.

ஆனால், இன்று, பல நூற்றுக் கணக்கானோரைப் பலிகொண்டு – பல பத்தாயிரம் மக்களை இடம்பெயர வைத்து, குடாநாட்டிற்கு ஒரு பாதை அமைக்க, அதே அரசு செயலில் இறங்கியுள்ளது.

அன்று, பாதை திறப்பை தனது இராணுவ நலனுக்கு முரணான விடயமாகப் பார்த்தது. இன்று, பாதை திறப்பு அதன் இராணுவ நலனுக்கு அத்தியாவசியமான தேவையாகிவிட்டது.

ஆகவே, பாதை திறப்பை குடாநாட்டு மக்களின் போக்குவரத்திற்கான ஊடகமாகப் பார்ப்பது மகா தவறு – பாதை அமைப்பு முயற்சி தமிழரின் தேசிய நலனுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியது. தமிழினத்தின் தேசிய இன அபிலாசைகளுக்கு இலக்கு வைத்து 'வீசியெறிப்படும் சுருக்குக் கயிறாக' பாதை அமைப்பைப் பயன்படுத்த அரசு முயலும் என்பதை தமிழினம் மறக்கக் கூடாது. ✳

www.tamilarangam.net



# சிங்களப் படைகள் மீது பரவலான தாக்குதல்கள்

மட்டக்களப்பில் விமானப்படை நிலைகள் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல் நடாத்தியுள்ளனர். கடந்த பத்து தினங்களுள் இப்பகுதி மீது விடுதலைப் புலிகள் இரண்டாவது தடவையாக இந்த மோட்டார் தாக்குதல்களை நடாத்தினர் என ஏ. எவ். பி. செய்தித் தாபனம் அறிவித்துள்ளது. கிழக்கில் விடுதலைப் புலிகள் இலக்குத் தவறாமல் நடாத்திவரும் தாக்குதல்களால் அச்சமடைந்துள்ள சிறிலங்காப் படைகள், பதுங்குகுழிகள் அமைத்து மறைந்து வாழ்வதுடன், ரோந்து நடவடிக்கைகளையும் குறைத்துள்ளன.

மதியாமடுவில், இம் மாதம் முதலாம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் மூண்ட கடுமையான நேரடி மோதலில் சிறிலங்காவுக்கு ஏற்பட்ட சேதவிபரங்களை சிறிலங்கா தெரிவிக்கவில்லை. ஆயினும், விடுதலைப் புலிகள் தமது தரப்பில்,

வீரவேங்கை கோமணி (ஆறுமுகம் கோகுலன், அம்பாறை)

வீரவேங்கை இளஞ்சேரன் (ராகவன் பெஞ்சமின் நிக்கலஸ், கிளிநொச்சி) ஆகியோர் வீரச்சாவு எய்தியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

### கிளிநொச்சியில்......

கிளிநொச்சியில் நடைபெற்ற இன்னொரு நேரடி மோதலில் சிறிலங்காப் படையினர் குறிப்பிட்ட இழப்புக்களைச் சந்தித்துள்ள போதிலும், அது குறித்த சரியான விபரங்கள் கிடைக்கப் பெறவில்லை. இம் மோதலின்போது, ஒன்பது போராளிகள் வீரச்சாவெய்தியுள்ளனர்.

### அம்பாறையில் ......

அம்பாறை மாவட்டத்தில், மாந்தோட்டம் - தீட்டுபற்றுப் பகுதியில், இம் மாதம் 2ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் நான்கு சிறிலங்கா ஊர்காவற் படையினர் கொல்லப்பட்டனர்.

உதவிக்கு விரைந்த விசேட அதிரடிப் படையினரும் விரட்டி அடிக்கப் பட்டனர். எவ்வித இழப்புகளும் இன்றி விடுதலைப் புலிகளால்

படையினரின் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் எடுத்துச் செல்லப்பட்டன. ✳

## சிங்கள இராணுவத்தின் வெறித்தனம் ...

அப் பிரதேச மக்கள் அனைவரும் அதிர்ச்சியும் - ஆவேசமும் அடைந்துள்ளனர். பெண் ஒருவர் ஆட்சி செய்யும் ஓர் நாட்டில் அவரின் படைகளால் இவ்வாறான கொடுமை ஓர் அபலைச் சிறுமிக்கு இழைக்கப்பட்டுள்ளமை, உலக நாகரீகத்துக்கு பூசப்பட்ட கரியாக உள்ளதென இந்த அதிர்ச்சி செய்தியறிந்த வெளிநாட்டுச் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னரும் யாழ். குடாநாட்டில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியைச் சேர்ந்த பன்னிரண்டு வயதான மாணவி, சிங்கள இராணுவக் குண்டர்களால் கூட்டான பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டமையும் முன்னர் செய்திகளில் வெளிவந்தது தெரிந்ததே. அத்துடன், இது குறித்து அக் கல்லூரி அதிபர் சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுக்கு முறையீடு செய்ய முயன்றபொழுது அவர் அச்சுறுத்தப்பட்டு அச் சம்பவம் மூடிமறைக்க, சிறிலங்கா அரசு வெளிப்படையாக முயற்சி செய்தது.

இவ்வாறான கொடூரச் சம்பவங்களைத் தொடர்ந்து தமது பிள்ளைகளை பாடசாலைக்கு மட்டுமல்ல வீட்டுக்கு வெளியே கூட அனுமதிக்க பெற்றோர் மிகுந்த அச்சம் கொண்டுள்ளனர். பிள்ளைகளை பாடசாலை செல்லும் வழியில் மட்டுமல்ல, அவர்களது வீடுகளை அவதானித்து வைத்து இரவு வேளைகளில் சோதனை எனும் பெயரில் அவ் வீடுகளுக்குள் சென்று அங்குள்ள பெண்களை மனித வதைகளுக்கு உள்ளாக்கி வருவதாகவும் யாழ். குடாநாட்டில் இருந்து பெயர் குறிப்பிட முடியாத கத்தோலிக்க குரு ஒருவர் தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில், இவ்வாறான சம்பவங்கள் பல, பயமுறுத்தல் காரணமாக வெளியே தெரிய வருவதில்லை எனவும் மிகவும் மனவருத்தத்துடன் கூறினார்.

தமிழர் பிரதேசத்தை ஆக்கிரமித்துவிட்டு, பின்னர் "தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவித்து விட்டோம்" என்று உலகிற்கு பொய்ப் பரப்புரை செய்யும் சிங்கள அரசின் படைகள், தமிழர் பகுதிகளில் உள்ளவரை, இத்தகைய மனித வதைகளை தடுக்கவோ குறைக்கவோ முடியாது எனக்கூறும் தமிழீழத்தவர்கள், சிறிலங்காப் படைகளின் வெளியேற்றம் ஒன்றால் மட்டுமே இயல்பான வாழ்வு திரும்ப முடியும் என

ஆணித்தரமாக எடுத்துக்கூறி, இதற்காகப் பாடுபடும்படி உலகத் தமிழர்களையும்

புலம்பெயர் தமிழீழத்தவர்களையும் வேண்டி நிற்கின்றனர்.

## பொதுமக்கள் படுகொலை

சுதுமலை அம்மன் கோவிலுள் முகாமிட்டுள்ளசிறிலங்கா இராணுவத்தினர் இரு பொது மக்களை கோவில் முன்றலில் வைத்துச் சுட்டுக் கொன்றனர். தெல்லிப்பளையைச் சேர்ந்த மகாலிங்கம் உதயகுமார் (24 வயது) என்பவரும் சுது மலையைச் சேர்ந்த ரமேஸ் என்பவரும் இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்ட அப்பாவி. தமிழ்ப் பொது மக்களாவர். ✳

## இறைமையை நிலைநாட்டவே .....

வைத்து தனது சுயரூபத்தை உலகுக்கு தெளிவாக்கியுள்ளார்.

"இந்த வைபவத்தில் வைத்து நான் அளிக்கும் வாக்குறுதி என்னவென்றால், எமது பதவிக் காலமான ஆறு ஆண்டுகள் முடிவதற்கிடையில் போரை வெற்றிகரமாக முடித்து வடக்கையும் கிழக்கையும் சிறிலங்கா அரசின் இறைமைக்குள் இணைப்போம் என்பதே"

-இவ்வாறு உறுதிமொழி பகர்ந்த சந்திரிகா, தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அல்ல - சிங்கள இறைமையை தமிழர் மேல் திணிப்பதற்கே போரில் ஈடுபட்டார் என்பதை பகிரங்கமாக அறிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், "இந்த நாடு சுதந்திரமடைந்த 35 ஆண்டு கால ஆட்சியில், இந்த நாடு இரண்டாக பிளவுபட்டது. பிரபாகரனின் தனியான அரசு, வடக்கில் உதயமாகியது. இதனை நான் மறைக்க விரும்பவில்லை. 85, 87ஆம் ஆண்டுகளில் எங்களில் ஒருவர் கூட வவுனியாவுக்கு அப்பால் போகமுடியாது இருந்தது" எனக்கூறி இதனை மாற்றியமைத்து மீளவும் சிறிலங்காவின் இறைமையைத் தமிழர் மேல் திணிப்பதை மையமாகக் கொண்டே தாம் போரில் இறங்கினார் என்பதை கூறாமல் கூறினார்.

மேலும், சிறிய நாடுகளான சுவிட்சலாந்து முதற்கொண்டு பெரிய நாடுகளான கனடா வரை, சமஸ்டி அரசியலமைப்பு நடைமுறையில் இருப்பதைச் சுட்டிக்காட்டிய சந்திரிகா, இத்தகைய அரசியல் அமைப்புகள் இல்லாமலே, அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலமும் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என பொன்மொழி பகர்ந்தார்.

அத்துடன் தமிழர்கள் தமது தாயகத்தில் அரசுரிமையுடன் வாழ்ந்து வந்த வரலாற்றை மறைக்கக்கூடிய வகையில், இலங்கையில் சிங்கள அரசர்களே பிரதான அரசர்களாக இருந்ததாகவும், தமிழர்களை அவர்களின் கீழ் உப அரசுகளாக இருக்க அனுமதித்து அவர்கள் அதிகாரப் பரவலாக்கம் செய்ததாகவும், இந்த வகையிலேயே யாழ்ப்பாண அரசு, கோட்டை அரசு போன்றவை விளங்கின எனவும் கூறினார். இந்த வகையான யாழ்ப்பாண அரசில் தமிழர்கள் முன்னூறு ஆண்டு காலமாக முன்னேற்றங்களைக் கண்டனர் என 'அறப்படிச்சவன்' கதையாக அப்பட்டமான வரலாற்றுத் திரிபுவாதம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

சிங்களச் சரித்திர ஆசிரியர்களான கே.எம்.டி. சில்வா போன்றவர்களே, யாழ்ப்பாண அரசு தனியரசாக இருந்தமையைத் தமது ஆய்வுகளால் வெளிப்படுத்தியதும் அல்லாமல் அந்நிய ஆட்சியாளர்களின் விலகலின் பின், தமிழ், சிங்கள அரசுகளை, பிரித்த காடுகள் குடியேற்றத் திட்டம் என்ற போர்வையில் அழிக்கப்பட்டமையே தமிழ், சிங்கள பிரச்சினைகள் தோன்றக் காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், எத்தனையோ சரித்திர ஆசிரியர்கள், பிறநாட்டு ஆளுனர்கள், பிறநாட்டு வணிகர்கள், கிறிஸ்தவ மதகுருமார் மற்றும் இலங்கைத் தீவில் வாழ்ந்த வரலாற்று ஆசிரியர்கள் யாழ்ப்பாண - வன்னி தனி அரசுகளின் சரித்திரச் சான்றுகளைத் தெட்டத் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆனால், சந்திரிகாவோ, தற்பொழுது விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள தமிழர் தாயகம் எனும் கோட்பாடும் - தமிழர்களின் சுயநிர்ணய உரிமை எனும் கோட்பாடும் சர்வதேச ஆதரவையும், சர்வதேச வலுத் தன்மையையும் கண்டு தடுமாறி, தான் எவ்வாறு சமாதான நாடகமாடி பின்னர் அதனை விடுதலைப் புலிகள் சமாதானத்தைக் குலைத்தார்கள் என பொய்யுரையை சர்வதேச பரப்புரையாக்கினாரோ, அவ்வாறே இப்போது வரலாற்றுத் திரிபுவாதத்தையும் ஜனாதிபதி என்ற அந்தஸ்து பெயர் கொண்டு சர்வதேசச் சந்தைப்படுத்தல் செய்ய முயல்கிறார்.

ஆயினும், சந்திரிகாவின் அநுராதபுரப் பேச்சில், அவரால் போரை நடாத்த முடியாது தவிக்கும் தவிப்பும், தனது இராணுவத் தோல்விகளை மூடிமறைக்க மீண்டும் அதிகாரப் பரவலாக்கல் நாடகமாட முயலும் கேவலத்தன்மையும் தெளிவாகப் புலப்பட்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். சந்திரிகா, பௌத்த மகாசங்கத்தினரிடம் மன்றாடுவது, அவரால் தனது வெற்றுக் காகிதத் திட்டங்களுக்கு சிங்களப் பேரினவாதத்தின் அங்கீகாரத்தைப் பெறமுடியாத அவலத்தை துல்லியமாகக் காட்டுகிறது. மேலும் 7000 பேரைக் கொண்ட பிரபாகரனின் படையை எதிர்க்க, தான் 20,000 இளைஞர்களை போர்முனைக்கு அனுப்பியுள்ளதாக வீரவசனம் பேசிய சந்திரிகா, பிரபாகரன் படையினை அழித்தாலும் - அரசியல் தீர்வு காணப்படா விட்டால் மீண்டும் மீண்டும் பல பிரபாகரன் படைகள் எழுந்துவரும் எனக்கூறியதன் மூலம் தமிழீழ மக்கள் தமது தேசிய விடுதலை மீது கொண்டுள்ள உறுதியைப் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஆயினும், தமிழ் மக்கள் மீது எப்படியாவது போர்ப் பிரகடனங்களைத் தொடர்ந்து அவர்களைத் தனது ஆறு ஆண்டு கால ஆட்சிக்குள் அடிமை கொண்டிட வேண்டும் எனும் உறுதி, அவரின் பேச்சில் இழையோடிக் கொண்டே இருந்தது.

அவரது பேச்சைக் கேட்ட சர்வதேச தமிழ் அவதானிகள். தமிழர் இராணுவமான தமிழீழ விடுதலைப் புலிகளை எவ்வளவு தூரத்துக்கு விரைவாகப் பலப்படுத்துகிறோமோ - எவ்வளவு விரைவாக சர்வதேச அங்கீகாரத்தை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கிறோமோ - அவ்வளவு விரைவாக தமிழர்

பிரச்சினை தீரும் என்பதையே சந்திரிகாவின் பேச்சு உறுதிப் படுத்துகின்றது என ஆணித்தரமாகத் தெரிவித்தனர்.

## மூன்றாவது ஈழப்போரில் .....

படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

"தமிழீழ விடுதலைப் புலிகளை காட்டுக்குள் அனுப்பி விட்டோம், யாழ்ப்பாணத்தை விடுதலை செய்துவிட்டோம்" என்றெல்லாம் சர்வதேச உலகிற்கு பரப்புரை செய்த சந்திரிகா அரசு, 6500 சிங்களப் படையினரை இழந்ததின்

மூலம் தனது பரப்புரைகளின் நம்பகத்தன்மையினை உலகறிய வைத்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மகுடம் சொல்லும் செய்தி என்ன?

ஆகா........ ஆனந்தம்........ எங்கும் பேரின்பம்......... இதோ! இயல்பு வாழ்வுக்குள் யாழ்ப்பாணம்....... சுதந்திரச் சுவாசிப்புடன் தமிழர்கள்........ பெண்மைக்கு மதிப்பளிக்கப்பட்டு மகுடம் சூட்டப்படுகிறது. தமது பண்பாட்டு நிகழ்வுகளில் மகிழ்ச்சியுடன் யாழ் மக்கள். தங்கள் மகிழ்ச்சியைக் கொண்டாட சிங்களப் படையினரையும் அழைப்பு.

என்ன இது? யாழ்ப்பாணத்தில் சமாதானம் வந்துவிட்டதா? அல்லது தமிழர்கள் பூரண உரிமைகள் பெற்ற குடிமக்களாகிவிட்டனரா? இல்லையம்மா – இல்லை. யாழ்ப்பாணத்தில் படையினர் தலைமையில் 'அழகுராணிப் போட்டி' – அதுதான் காரணம் இத்தனை மகிழ்ச்சிக் கூச்சலுக்கு. எங்கு போய் யார்மீது முட்டிக்கொள்வது இந்த அவலங்களுக்கு?

சிறிலங்கா அரசு தமிழர் மீதான திட்டமிட்ட இனஅழிப்பு நடவடிக்கையின் ஒரு அங்கமாக 'சூரியக்கதிர்' மூலம் யாழ் குடாவைக் கைப்பற்றியது. மக்களை தனது படையினரின் ஆளுகைக்கு உட்படுத்தி இறுமாந்து நிற்கும் சிங்கள அரசு, சர்வதேச அரங்கில் தன்னைத் தமிழர்களின் உண்மையான கரிசனை மிகுந்த 'பாதுகாவலன்' எனக் காட்டிக் கொள்வதற்கும், தனது கோர முகத்தை மக்களிடமிருந்து மறைப்பதற்குமாக, "ஒரே கல்லில் இரண்டு மாங்காய்" என்ற கணக்கில் கையாளும் பரப்புரை நடவடிக்கைகளில் மிகவும் கீழ்த்தரமான ஒன்றாகவே இந்த அழகுராணிப் போட்டியைப் பார்க்க முடிகிறது.

பெண்ணுக்குப் பெருமை தந்து உயர்வு தருவது அவளது அறிவும் ஆளுமையுமே. அறிவு மேம்பாடும் ஆளுமை மேம்பாடுமே அவளது நிகழ்காலத் தேவையாகின்றது. அவளை அழகுப் பதுமையாகச் சித்தரித்து காட்சிப் பொருளாக்கிய மூடத்தனங்கள் சென்ற நூற்றாண்டோடு போயொழிந்து, மலரும் நூற்றாண்டு புரட்சிகரப் பெண்களை உருவாக்கும் ஆண்டுகளாக மலரவேண்டும் என்ற நோக்குடன் சமூகப் பொறுப்புணர்வுள்ள ஒவ்வொருவரும் பாடுபடும் இவ்வேளையில், சிறிலங்காப் படைகளோ பெண்களின் ஆளுமையைச் சிதறடித்து அவளது அறிவை மழுங்கடிக்கும் வகையில் அழகுராணிப் போட்டிகள் நடாத்தி, அவர்களை அழகுப் பதுமைகளாக்கி சமுதாய அழிப்பு

**சிமிழ் (தமிழீழம்)**

ணர்வோடு தீவிரமாகச் செயற்பட்டு தனது செயற்பாட்டுத் திறனை உலகெங்கும் பறைசாற்றி நிற்கின்றது.

இனவாத கொடூர முகம் கொண்டு மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட காம வெறியர்களாகி தமிழ்ப் பெண்கள் மீது தமது மிருகத்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, அவர்களுக்கு சாவு மகுடம் சூடிய அதே கரங்கள் மறுபுறத்தே அவர்களது அழகுக்கு மகுடம் சூடத் தயாராகி நிற்பதன் உள்ளர்த்தம் என்ன? இந்தக் களியாட்ட மகுடம் சூட்டுவிழா கிரிசாந்தி, ராஜினி போன்ற தமிழ்ப் பெண்களின் அவலச் சாவுகளை புதைகுழிக்குள் போட்டுமூடி மறைத்தழித்து மறக்கச் செய்துவிடும் என்பதா?

நடைமுறை உலகுக்கு அப்பாற்பட்டு, பெண்களை வண்ணக் கனவுகளில் மூழ்கச் செய்து அவர்களது புரட்சிகரப் போராட்ட சிந்தனைகளை மழுங்கடித்து, அவர்களது ஆளுமையை, அறிவைச் சிதைத்து, வெறும் பாலியல் பதுமைகளாக உருவாக்கும் இந்தக் கீழ்த்தரமான போட்டிகள் மூலம் தமிழர் மனங்களை வென்றுவிடலாம் என்றோ, சர்வதேசம் தம்மைத் தமிழர்களின் பாதுகாவலனாக அங்கீகரித்துவிடும் என்றோ சிறிலங்கா எண்ணுமாயின், அது வெறும் பகற் கனவே!

இன்று தமிழ் மக்கள் அனுபவிக்கும் அத்தனை துன்ப துயரங்களுக்கும் காரணகர்த்தாவான சிங்கள அரசுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சகல வழிகளிலும் இணைந்து செயற்பட்டு உலகத் தமிழர்கள் அனைவரினதும் வெறுப்பைச் சம்பாதித்து நிற்கும் தேச விரோத தமிழ்க் குழுக்குளில் ஒன்றான ஈபிடிபி. "ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத கதையாக" இந்த அழகுராணிப் போட்டியைக் கண்டித்து, கண்துடைப்பு அறிக்கை வெளியிட்டுவிட்டு, அத்தோடு தனது தார்மீகப் பொறுப்பு முடிவடைந்துவிட்டது போல் வாயை மூடிக்கொண்டுவிட்டது. சொல்லுக்கு மட்டும் சொந்தக்காரர்களாகி, தமது சுயநலன்களையே இலக்காகக் கொண்டுள்ள இவர்களால் வேறெதைச் செய்ய முடியும். "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாக" இருப்பதைத் தவிர...?

இந்தச் சூழ்நிலையில் மட்டுமல்ல, எந்தச் சூழ்நிலையிலுமே பெண்களை இழிவுபடுத்தி, அவர்களை அழகுப் பதுமைகளாக்கும் இத்தகைய கேவல நடவடிக்கைகளை யாரும் எமது மண்ணில் நடாத்துவதை நாங்கள் விரும்பவில்லை. விளம்பரங்களிலும், திரைப்படங்களிலும் காட்சி மேடைகளிலுமாக பெண்களை அலங்காரத் தேவதைகளாக்கி, இழிவான நிலைக்குத் தள்ளிவிட்டு இன்று மீட்டெடுக்க முடியாது திண்டாடும் இந்திய, மற்றும் வெளிநாட்டு அவலங்கள் எமது மண்ணுக்கு வேண்டாம். தன்னம்பிக்கையும் அறிவாற்றலும் நிறைந்த பெண்கள் வாழும் நாடாகவே நாங்கள் தமிழ் தேசத்தை உருவாக்க நினைக்கின்றோம்.

அழகு! எங்கிருந்தாலும், எதில் இருந்தாலும் அது ரசனைக்குரியதே. ஆனால், அதனை அரங்கத்தில் ஏற்றி அசிங்கப்படுத்தும் நிகழ்வாகவே இந்த அழகு ராணிப் போட்டிகளைக் கொள்ளமுடியும். யாழ்ப்பாணத்தில் படையினரால் சூட்டப்பட்ட மகுடம் – அழகுக்கு என்பதைவிட, எம் பெண்களின் அழிவுக்குச் சூட்டப்பட்டது என்பதே பொருத்தமானதாகும். அறிவும் ஆளுமையும் சாதிக்காத எதை உடலழகு சாதிக்கப் போகிறது என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்து கொள்ள வேண்டுகின்றோம்.

**நன்றி :சுதந்திரப்பறவைகள்**

# சரத் முனசிங்கவிற்கு "பட்டம்" தேவை

சர்வதேச அரங்கில் இன்று விநோதமான பல போட்டிகள் நடைபெறுகின்றன. அதில் ஒரு சில உதாரணங்களாகி விடுகின்றன. மற்றும் அவற்றில் சில உலக சாதனைகளாகவும் கொள்ளப்படுகின்றன. சிலவற்றிற்கு பெரும் பரிசில்களும் வழங்கப்படுகின்றன. இவ்வாறான போட்டிகளுள் உரத்துக் கூச்சலிடுதல், தொடர்ந்து சிரித்தல், அதிகளவில் சாப்பிடுதல் போன்றவை ஒரு சில உதாரணங்களாகும். இந்த வகையில் உலகில் இன்று அதிகப் பொய் கூறுவதற்கு யார் என்று கேட்டால் அல்லது போட்டி இடம் பெறுமானால் அது சிறிலங்கா அரசின் இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் சரத் முனசிங்காவிற்கு கிடைக்கும் என்பதில் வேறு கேள்விக்கே இடமில்லை. இந்த ரீதியில் சரத் முனசிங்கவின் பெரும் பணி தற்போதுதான் ஆரம்பமானது அல்ல, ஐ.தே.கட்சியின் ஆட்சிக்காலத்தில் இருந்தே சிங்கள ஆட்சியாளர்களுக்காக அவர் தொடர்ந்து செயற்பட்டு வந்துள்ளார். ஆனால் சந்திரிக்கா அரசாங்கம் பதவி ஏற்றதும் முதலில் அவரை மாற்ற முயன்றது. மட்டு மாவட்டத்திற்கு இராணுவப் பொறுப்பதிகாரியாக அனுப்பியும் வைத்தது. ஆயினும் வேறு எவரும் இவர் போன்று அரும்பணி செய்ய முடியாமல் போகவே மீண்டும் அவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டு இராணுவப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரிகேடியர் சரத் முனசிங்காவின் பேச்சுக்கள் பொதுவாகவே கொளுப்பிட்டியைப் பிடித்தால் கொழும்பைப் பிடித்தது போன்றதாகும். ஆனால் இது கூட சில சமயம் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று கூடக் கூறலாம். ஆயினும் அனுராதபுரத்தில் நின்று கொண்டு கொழும்பைப் பிடித்து விட்டதாகக் கூறக் கூடியவர் அவர். இதற்கு எடுத்துக்காட்டாக ஒப்பரேசன் லீப்போவேட் நடவடிக்கையின்போது அவர் வெளியிட்ட தகவல்களைச் சுட்டிக் காட்டலாம். அதாவது ஒப்பரேசன் லீப்போவேட் துருப்புக்கள் மீது புலிகள் நடாத்திய புலிப்பாச்சல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு பலாலி முகாமுக்கு திரும்பிய நிலையிலும், பிரிகேடியர் சரத் முனசிங்க இராணுவம் யாழ் நகர் நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். அதுமட்டுமல்ல இராணுவம் முன்னேறும் வழிகள் இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ள பகுதிகள் என வரைபட விளக்கமும் தெரிவித்தார். இந்த ரீதியிலேயே தற்பொழுது ஜெயசிக்குறு படை நடவடிக்கை குறித்தும் அவர் பேசி வருகின்றார். புளியங்குளத்தை, குறிப்பாக புளியங்குளச்சந்தியை நோக்கி முன்னேற மேற்கொண்ட பல முயற்சிகளில் இராணுவம் தோல்வி கண்டுள்ள நிலையில் சரத் முனசிங்கவோ இராணுவம் புளியங்குளத்தை தாண்டி முன்னேறிக் கொண்டு இருக்கின்றது என்று தெரிவிக்கின்றார். அத்தோடு இன்னமும் எஞ்சியுள்ள 5000 அல்லது 6000 புலிகள் விரைவிலேயே தோற்கடிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவிக்கின்றார். இவ்வாறு பிரிகேடியர் சரத்முனசிங்கவின் பேச்சானது ஒரு வகையில் இராணுவ ரீதியான தந்திரோபாயம் எதிரிக்கு எதிரான உளவியல் யுத்தம் எனக் கூறிச் சிலர் முயற்சிக்கக் கூடும். ஆனால் இவை உண்மைக்கு மாறான தகவல் என்ற விபரம் வெளியானதும் அதனால் விளையக்கூடிய பாதிப்பைப் பொருட்படுத்தாது இருப்பவர்களே இவ்வாறான தன்மைகள் குறித்துக் கூற முடியும். ஏனெனில் சரத் முனசிங்க கூறும் பொய்கள் தனியாக அவரை மட்டும் பாதிப்பதாக இல்லை. அவரை மட்டும் பாதிப்பதானால் அது அவரின் கௌரவத்தை மட்டுமே தொடர்புடையதாகும். ஆனால் இவர் கூறும் பொய்கள் சிறிலங்காவையே பாதிக்கக் கூடியதாகும். ஒரு வகையில் பார்த்தால் முழுமுகத்தையும் ஏமாற்றும் முயற்சியாகும். இது நாட்டையும் மக்களையும் தவறான வழியில் இட்டுச் செல்லக் கூடியதாகும். ஆனால் அது எவ்வாறு இருப்பினும் சரத் முனசிங்கவிற்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் கடமைப்பட்டவர்களே. இதற்காக விசேட பட்டங்களும் உதவிகளும் பிரதியுபகாரமாக அவருக்கு அவர்கள் வழங்கியே ஆக வேண்டும். ஏனெனில் ஆட்சியாளர்கள் இராணுவத் தீர்வில் கொண்டுள்ள நம்பிக்கையை இதுவரை பாதுகாத்து வந்தவராக பிரிகேடியர் சரத்முனசிங்கவே உள்ளார். அதாவது போரின் வெற்றியை அவரின் வாய்ப்பேச்சு மட்டுமே நிரூபித்து நிற்கின்றது. ஆனால் இதற்காக சந்திரிக்கா அரசானது பிரிகேடியர் சரத்முனசிங்காவை மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்துவது பொருத்தப்பாடாக இருக்கமாட்டாது. ஏனெனில் இப் பதவி நிலையானது. இராணுவத்தில் சேவை செய்பவர்களுக்கே உரியதாகும். ஆகையினால் ஆட்சியாளருக்காகப் பொய் பேசும் சரத் முனசிங்காவைப் போன்றவர்களுக்கு இப்பதவியை வழங்குவது அப்பதவிகளையே அவமரியாதை செய்வது போன்றது ஆகும்.

**நன்றி : ஈழநாதம்**

# இனவாத அரசின் நண்பர்கள்

"ஊழல் செய்யும் அதிகாரிகளை விசாரணை செய்யாது யுத்தத்தில் பயன்படுத்துவதே சந்திரிகா அரசின் தற்போதைய குறிக்கோளாக இருக்கின்றது". ஏ. எப். பி. செய்தியாளர்களின் இக்கூற்று ஓர் ஆச்சரியம் அளிக்கும் விடயமாகத் தமிழ் மக்களுக்கு இல்லை. ஏனெனில் சந்திரிகா அரசாங்கத்தில் ஊழல் செய்யும் அதிகாரிகள் மட்டுமல்ல பெரும் படுகொலைகளைப் புரிந்த அதிகாரிகளையும் யுத்தத்தில் பயன்படுத்தி வருவதுமே யதார்த்தமானதொன்று. சந்திரிகா அரசானது யுத்தத்தின் நிமித்தம் இராணுவ அதிகாரிகளுக்கோ அன்றி தேசியப் பணித்துறை அதிகாரிகளுக்கோ தன்விருப்பப்படி சலுகைகள் வழங்குவதோ ஒரு புதிய விடயம் அல்ல. இந்த வகையில் ஆயுதப் படையில் இணைவோருக்கு பெரும் சலுகைகள் அறிவித்த அதேவேளை ஆயுதப்படையில் இருந்து தவறு இழைத்தவருக்கும் சலுகை அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வகையில் ஆயுதப்படையில் இருந்து குறிப்பாக இராணுவப்படையில் இருந்து தப்பியோடியவர்களுக்கு பொது மன்னிப்பு என்ற ரீதியில் பல தடவைகள் மன்னிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 12ம் பக்கம் ........

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எண்பதினாயிரம் தமிழர் உயிரிழப்பு எழுநூறாயிரம் தமிழர் இடம்பெயர்வு சர்வதேச மனித உரிமைக் குழு முன் முறையீடு

"இலங்கையில் தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில், சிறிலங்காவின் ஆக்கிரமிப்புச் செயல்களினால் மனித நேயச் சட்டங்கள் வன் முறைப்படுத்தப்படுகின்றன. இன அழிப்பு நோக்கிலான நடவடிக்கைகளினால் 80,000 தமிழர்கள் உயிரிழந்ததும் அல்லாமல் 700,000க்கு மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக இடம் பெயர்ந்தும் உள்ளனர். ஆவணி 1994 இற்கும் பங்குனி 1997இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 1330 தமிழ்ப் பொதுமக்கள் சிறிலங்காப் படைகளினால் கொல்லப்பட்டுள்ளனர். ஏப்ரல் 11ஆம் திகதி சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த `அவசர நடவடிக்கைக்கான` வேண்டுகோள் ஒன்றில் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் 600 பேர் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது. சிறிலங்கா அரசு, மனித உரிமைகளை மேம்படுத்துவதாக வாக்குறுதி அளித்துள்ள நிலையிலேயே இவை நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது."

இவ்வாறு சர்வதேச அமைப்பான NORD - SUDXXI , சர்வதேச மனித உரிமைகள் உப ஆணைக்குழு முன்பாக அளித்த வாக்குமூல முறைமீட்டில் தெரிவித்துள்ளது.

அவ் அமைப்பு மேலும் கூறியுள்ளதாவது:

"மனித உரிமை ஆணைக்குழுவின் 53வது அமர்வில் அமெரிக்க பிரதிநிதிகள் குழுவின் தலைவர், "சிறிலங்காவின் மனித உரிமை நிலை பிரச்சினைக்குரிய அளவுக்கு மோசமாக இருப்பதை அவதானிக்கின்றோம். குறிப்பாக, யாழ்பாணத்தில் 700பேர் காணாமல் போயுள்ளதுடன் மனித உரிமை துஸ்பிரயோகங்களில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினர் மீதான அரசின் விசாரணைகள் மிகமிக மெதுவாக நடைபெறுவதையும் கவனத்தில் கொள்கின்றோம்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

சிறிலங்கா அரசு, மேற்கொண்டுள்ள உணவு, மருந்துத் தடைகளினால் 700,000க்கு மேற்பட்ட மக்கள் வன்னி பிரதேசத்தில் அவலப்படுகின்றனர். பட்டினியால் வாடும் மக்களிற்கு மலேரியா, செப்ரிசேமியா போன்ற கொடிய நோய்கள் ஏற்பட மருந்துத் தடை காரணமாகின்றது. உணவும் மற்றைய அத்தியாவசியப் பொருட்களும் போர்நடைபெறும் பகுதிகளிற்கு அனுப்பி வைக்கப்படுமென சிறிலங்கா அரசு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிற்கும், ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளருக்கும் வாக்குறுதி அளித்தபோதிலும், இதற்கு மாறான முறையில் எந்த வாகனங்களும் இப் பிரதேசங்களிற்கு உணவு ஏற்றிச் செல்லாதவாறு சிறிலங்கா தனது படைகள் மூலம் தடுத்து வருகின்றது. மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்களின் உணவு விநியோகத்திற்கான அவசர வேண்டுகோள்களை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு புறக்கணித்து வருகின்றது.

செஞ்சிலுவைச் சங்கத்தினர் உணவு - மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதியினையும் சிறிலங்கா மறுத்துள்ளது. ஐ.நா.அகதிகள் ஆணையாளர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஒக்ஸ்பாம், கெயர், எம்.எஸ்.எவ். போன்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் வன்னிப் பிரதேசத்தில் நிலவும் உணவுத் தட்டுப்பாட்டினை பகிரங்கமாக ஒத்துக் கொண்டுள்ளன. ஐ.நா. அகதிகள் ஆணையாளர் நிறுவனம், சிறிலங்கா, தமிழ் மக்கள் மீது உணவுத் தடையை ஏற்படுத்தியுள்ளமையையும் அதனுடைய மற்றைய நடவடிக்கைகளையும் கண்டித்துள்ளது.

வடபகுதியில் உள்ள மக்கள் வான் குண்டுவீச்சு அபாயங்களை எந்நேரமும் எதிர்நோக்கியபடி அச்சத்துடன் வாழ்கின்றனர். 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையின் போது தமிழர்களின் விளைநிலங்கள் வேண்டுமென சேதமாக்கப்பட்டன. 'புக்காரா', 'கிபீர்' போன்ற போர் விமானங்கள், விளைநிலங்களை சேதமாக்கும் ஈனச் செயலில் ஈடுபட்டன. தமிழ் மக்கள் மரணமடைவதும் காயமடைவதும் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.. உதாரணமாக, வைகாசி 21ஆம் நாள் கிழக்கு மாகாணத்தில் நான்கு பிள்ளைகளின் தாயான திருமதி கோணேஸ்வரி முருகேசுப்பிள்ளை, சிங்களக் காவற்துறையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். சர்வதேச மன்னிப்புச் சபையின் தகவலின்படி இவரது பெண்ணுறுப்பில் கைக்குண்டு வெடிக்க வைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதனை விசாரிக்க விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்தபோதும் அவ்வாறு ஏதும் நடைபெறவில்லை என்பதே உண்மை. இதனை வெறும் கண்துடைப்பு முயற்சியாகவே மக்கள் கருதுகின்றனர்.

தமிழர்களுடைய அடிப்படை உரிமைகள் மீறப்படுவதும் அல்லாமல் அவர்களின் உயிர் வாழும் உரிமை கூட மறுக்கப்படுகின்றது. அனைத்து மனித உரிமைகளும் மீறப்பட்டு வருவதற்கான சாட்சியங்களும் சான்றுகளும் நிறையவே உள்ளன.

சர்வதேச சமூகத்தினை ஏமாற்றுவதற்காக, மனித உரிமைகள் மேம்படுத்தப்படுவதாக சிறிலங்காவால் பொய்ப் பிரச்சாரம் செய்யப்படு கின்றது.


கடுமையான தணிக்கைகள் மூலம், செய்தியாளர்களின் தமிழ்ப் பிரதேச அனுமதி தடுக்கப்பட்டு வருகிறது. இதனால் ஆயுதம் தரிக்காத அப்பாவிப் பொதுமக்களிற்கு எதிராக சிறிலங்கா புரியும் இனஅழிப்புக் கொடுமைகளும்

அது குறித்த இப் பிரதேச மக்களின் கருத்துக்களும் சர்வதேச உலகின் கவனத்திலிருந்து மறைக்கப்படுகின்றது. ✳


## தியாகதீபம் திலீபனின் நினைவுடன் தொப்புள் கொடி உறவுக்காக 30 நாட்கள்



**14 - 09 - 97 முதல் 12 - 10 - 97 வரை**



### எமதினிய தமிழீழ மக்களே !

எமது தாயக பூமியிலிருந்து ஆக்கிரமிப்புப் படைகளை அகற்றவும்,தமிழீழ தேசத்தைக் கட்டியெழுப்பவும், எமது மக்களின் துயரங்களைத் துடைத்து எமது இனத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், எமது செயற்பாட்டாளர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களில் உங்கள் இல்லங்களுக்கு வருகை தருவார்கள். சென்ற ஆண்டுபோல் தொப்புள் கொடி உறவுக்காக மனமுவந்து உங்கள் உச்சப் பங்களிப்பினை வழங்குங்கள்.

"எம் சொந்தங்களின் துயர்துடைக்க நம் நெஞ்சங்களைத் திறப்போம்"

U.T.O. 202, Long Lane, London SE1 4QB.

☎ 0171 403 4554, 0956 329 660, 0956 314 370


## அவுஸ்திரேலியாவில் லெப். கேணல் திலீபனின் பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி

லெப். கேணல் திலீபனின் பத்தாவது ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு அவுஸ்திரேலியாவில் 27. 08. 97 (புதன்கிழமை) அன்று இரத்ததானம் வழங்கும் நிகழ்வொன்றை, தமிழர் ஒருங்கிணைப்புக்குழு சிட்னிக்கிளை ஒழுங்கு செய்தது. தமிழ் மக்கள் பலர் இந்த இரத்ததானம் நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். அத்துடன், தியாகி திலீபனின் நினைவாக 31. 08. 97 (ஞாயிறு) அன்று 19 வயதுக்குட்பட்டோருக்கான சதுரங்கப் போட்டியும் நடாத்தப்பட்டது.

மேலும், 14. 09. 97 (ஞாயிறு) அன்று சிறுவர்களுக்கான பேச்சுப் போட்டியையும் 21. 09. 97 (ஞாயிறு) அன்று பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் தியாகதீபம் திலீபனின் பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியையும் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு சிட்னிக்கிளை நடாத்தவுள்ளது.


## லெப். கேணல் திலீபன் அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவுநாள்

**இடம் :**

Kulturzentrum
Berliner Platz 11
44623 Herne

**காலம் :**

20 . 09 . 1997
சனிக்கிழமை,17 : 00 மணிக்கு

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் , யேர்மனிக்கிளை

திலீபனின் நினைவில் ஒன்றுகூடுவோம்! விடுதலைப்பாதையில் நடைபோடுவோம்!!

www.tamilarangam.net



# நம்மின விடுதலைக்கு நாம்தான் உதவிக்கரம்

உலகெல்லாம் பரந்து அரசியல் தஞ்சம் கோரி வாழும் தமிழீழ மக்கள் சமுதாயம் 1983 யூலை இனஅழிப்பு நினைவாக, ஒவ்வொரு ஆண்டு யூலை மாதமும் அதனை நினைவு கொள்வார்கள். அன்று நடந்ததை இன்று நினைத்தாலும் ஆவி சோரும். இன்று நடப்பவை அன்று நடந்தவற்றை விட மொசம் என்பதைப் பார்க்கையில் நெஞ்சம் கொதிக்கும். பகிரங்க இனஅழிப்பைச் செய்யும்




இனவெறி அரசை – ஜனநாயகத்தையே நசுக்கும் சர்வாதிகார அரசை – அகதிகளாகக் கூட தமிழர் தம் தாயகத்தில் வாழக்கூடாது என வரலாறே காணாத இனவெறியைக் கக்கும் பேயாட்சி – சந்திரிகா அரசை சர்வதேச அரசுகள் எப்படிக் கண்டிக்காமல் இருக்கின்றன; கண்மூடி உறவாடுகின்றன; ஆயுதங்களை ஆயுதத் தளபாடங்களை அள்ளி வழங்குகின்றன; நிதி உதவிகள் வழங்கி ஆதரிக்கின்றன; என்றெல்லாம் எண்ணும் பொழுது உணர்ச்சி துடிக்கும். "சர்வதேச உலகமே! மேற்கு நாட்டவர்களுக்கு ஒரு நீதி! யூத இனத்தவர்க்கு ஒரு நீதி! தமிழர்களுக்கு எதை நீதியென்கிறாய்" என தமிழக கிறிஸ்தவ குரு ஒருவர் கேட்டதை ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தவர்கள் கண்டனர். தமிழீழச் சகோதரர்களது துன்பக் கதை கேட்டு விழி சிவக்கும் தமிழகப் பூர்வீக மலேசிய – சிங்கப்பூர் தமிழர்களைக் கண்டோம். "உங்கட துன்பத்தை துடைக்காத இந்திய மத்திய அரசு, எங்கட துன்பத்தையும் தமிழன் என்ற ஒரே காரணத்திற்காக துடைக்காமல் விடும் காலம் வெகு தூரத்தில் இல்லை. மலையகத் தமிழர்க்கு அரசு நோக்கிய அரசு உண்டு. அதனை மறையான ஆட்சியுரிமை ஆக்குங்கள் என எழுதியும் பேசியும் சிங்களத் தலைமைகளை அழுத்தி வந்த ஜவகர்லால் நேரு பின்னர் அதே மலையகத் தமிழ்ச் சமுதாயம் நாடற்றவர் ஆனதைக் கண்டு தாயைப் பழித்த ஜே.ஆரிடம் சரணாகதி ஒப்பந்தம் எழுதி தமிழீழ விடுதலைப் போராட்டத்தையே எப்படி நசுக்கப் புறப்பட்டார். இவை எல்லாம் தமிழீழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல – முழுத் தமிழக மக்களுக்குமே முதுகில் விட்ட குத்துக்கள். இந்தப் பிழைகளைத் திருத்தும் திராணியற்று இன்று தென்னாசியாவினது மேலாண்மையினையே பறிகொடுத்து தவிக்கும் மத்திய அரசு தமிழீழத் தமிழர்களுக்கு மண்ணை அள்ளிப் போடுவதாக நினைத்து தன் தலையிலேயே மண் அள்ளிப் போடுகிறது." எனப் பேசும் தமிழகத் தமிழ் நெஞ்சங்களை நிறையச் சந்திக்கின்றோம்.

"உங்கள் தமிழீழச் சந்ததி விடுதலை எங்கள் தமிழர் சரித்திர விடுதலை. உங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் அரசியலுக்கு அப்பாற்பட்ட, நாட்டு எல்லைகளுக்கு அப்பாற்பட்ட விடுதலை வீரன்" என தமது உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர்.

இவ்வாறாக, உலகெல்லாம் தமிழீழத் தமிழர் பிரச்சினையாலும் அதன் விளைவான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தாலும் தமிழர் எல்லாம் உணர்ச்சிப் பிழம்பாகி நிற்பதை – தமிழகம், சிங்கப்பூர், மலேசியா முதல் தென்னாபிரிக்கா ஈறாக – ஐரோப்பா முதல் அவுஸ்திரேலியா, கனடா அமெரிக்காக் கண்டங்கள் வரை காண்கிறோம்.

இருந்தும் ஒரு குறை. இந்த உணர்ச்சிகள் உணர்வுகளாக மாறுவதில் ஒரு சிறு தவறைக் காண்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டம் மெச்சப்பட வேண்டிய ஒன்று – புகழப்பட வேண்டிய ஒன்று – நினைக்கின்றோமே தவிர, ஒவ்வொரு தமிழனும் அந்தத் தெசிய விடுதலைப் போராட்டத்தை நெஞ்சில் மட்டுமல்ல வாழ்விலும் சுமக்க வேண்டும் என்பதை மறந்து விடுகிறோம். அது எம் வாழ்வின் ஒரு பாகம். நாமும் அதன் ஒரு அங்கம். "ஆயிரம் ஆயிரமாய் பேரணியில் திரள்வார்கள் தானே..... நான் மட்டும் போகாதுவிட்டால் என்ன? என்னிலும் பண வலிமை உள்ளவர்கள் கொடுப்பார்கள் தானே..... நான் மட்டும் கொடுக்காது விட்டால் பெரிய பாதிப்பு இல்லையே" என எண்ணுபவர்கள் சிலர் இருக்கவே செய்கிறார்கள். இந்நிலை மாறவேண்டும். அவர்கள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். உண்மையில், இத்தகையவர்கள் காழ்ப்புணர்ச்சிக்கு உரியவர்கள் அல்ல, அனுதாபத்துக்கு உரியவர்கள். ஒரே இனம் என்ற அடிப்படையில் மட்டுமல்லாமல் மனிதாபிமான அடிப்படையில் உளப்பூர்வமாகச் சிந்திக்க வேண்டும். யாருக்கு யார் கொடுக்கிறோம்? எதற்கு எதை கொடுக்கிறோம்? கேட்கிறார்கள் கொடுக்கிறோம்! எனும் நிலை மாறி தேவையறிந்து கொடுக்கிறோம்! எனும் நிலையாக மாற்ற அனைத்துத் தமிழர்களும் செயற்பட வேண்டும்.

இன்று, வெளித் தொடர்புகளைத் துண்டித்து சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மறைமுகமான தமிழர் இனஅழிப்பு மெதுவாக, ஆனால் நன்கு திட்டமிடப்பட்ட வகையில் நடைபெற்று வருகின்றது. மேலும், தமிழர் வாழும் பிரதேசங்களை ஆக்கிரமித்து அவர்களை அடிமை கொள்ள சிறிலங்கா இனவெறி அரசு பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது. ஆனால், தனது படைகளின் இயலாத்தன்மையால் – அதனை நனவாக்க முடியாமல் தவிக்கிறது. இத்தகைய அழிவு நிலையை தொடர்ந்தும் ஏற்படாமல் தடுக்க, ஆக்கிரமிப்புப் படையை முற்றாகத் தமிழீழத் தாயகத்தில் இருந்து விரட்டியடிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது தமிழர் படை.

தம்மின மக்களின் விடுதலைக்காக, தமது அதிஉச்ச தியாகத்தைச் செய்த ஆயிரமாயிரம் மாவீரர்களை உங்கள் உறவுகளாக நினைத்துப் பாருங்கள். இன்னும் ஆயிரமாயிரமாய் களத்தினில் திரண்டு நின்று ஓர் ஆள் – ஆயுத பலம் கொண்ட எதிரியை சந்திக்கும் போராளிகளை எண்ணிப் பாருங்கள். இப் போரை அவர்கள் விரும்பி ஏற்கவில்லை. போர் அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையே போராட்டமாக – போராட்டமே வாழ்க்கையாகியுள்ளது. இதனை அம் மண்ணிலிருந்து வந்த நாம் ஏன் யதார்த்தமாகச் சிந்தித்து செயலாற்ற முடியாது. இயலாது என்றில்லை. முயன்றால் இவைகளைச் செய்வதில் எமக்கு எந்தத் தயக்கமும் ஏற்பட முடியாது. நிச்சயமாக நாம் சிந்திக்கத் தெரிந்தவர்கள். எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள் நம்மிடம் நிறையவுண்டு. அந்த எதிர்காலம் ஒட்டுமொத்தமாக எம்மினத்திற்குரியதாகவும் இருக்க வேண்டும். அதற்கு நம்மின விடுதலையை வென்றெடுக்க வேண்டும். அதனை விரைவில் வென்றெடுக்கும் விடயத்தில் புலம்பெயர் வாழ் நம்மவரது பங்கு மிகப்பெரியளவில் உண்டு. ஆகவே, தமிழர் படை வெற்றி கொள்ளும் சமர்களின்போது நாம் எவ்வாறு அகமகிழ்வு கொள்கிறோமோ, அப் படை நெருக்கடியான கால கட்டங்களைச் சந்திக்கும்போது அவர்களின் கரங்களைப் பலப்படுத்து வதும் நம் கடமையே. இதனை தமிழரல்லாதவர்கள் ஒருபோதும் செய்யப் போவதில்லை. இந்தவகையில், நாம் ஒவ்வொருவரும் செய்யும் பங்களிப்புக்கள் ஈற்றில் நமது இனவிடுதலையை விரைவில் பெற்றுக் கொடுக்கும். இதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொள்ளுங்கள். ✷

## -அக்னஸ்-

எப்படி மௌனமானார் – தமிழர்களுக்காய் பேசியும் சர்வதேச அரங்குகளில் குரல் எழுப்பியும் வந்த இந்திரா காந்தி அம்மையாரின் மகன் ஒரு பாதுகாப்பு பேரமாக தமிழர் பிரச்சினையை மாற்றி

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **10- 10 - 1997** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**



www.tamilarangam.net



# "எடிபல ஓடி ஜெயசிக்குறுய் வரும்வரை காத்திருந்ததாம் புலிப்படை"

பல்வேறு நோக்கங்களை மனதில் வைத்தபடி நூற்றுக்கணக்கான இராணுவ நடவடிக்கைகளை அரசுப்படை நடாத்தலாம்.

❑ ஆட்சியிலுள்ள அரசின் அரசியல் ஆதாயத்திற்காக சில இராணுவ நடவடிக்கைகளை எதிரிப்படை முடுக்கி விடும்.

❑ விடுதலைச்சேனையின் படைபலத்தை நுகர்ந்துபார்க்கும் அல்லது அதற்குப் பொறிவைத்திருக்கும் இராணுவ எண்ணங்களுடன் படை நடவடிக்கைகள் நடைபெறலாம்.

❑ கேந்திர முக்கியத்துவம் மிக்க நிலைகளை ஆக்கிரமிக்கும் எண்ணத்துடன் படை நடாத்தலாம்.

❑ புவியியல் முற்றுகைக்குள் அல்லது இராணுவ முற்றுகைக்குள் உள்ள தனது படைக்கான விநியோக வழியை ஏற்படுத்த சில இராணுவ நடவடிக்கைகளைச் செய்யலாம். அதாவது, தனது படையின் உயிர் வாழ்தலுக்காகவே ஒரு படையெடுப்பு நடைபெறலாம்.

❑ இயற்கை வளத்தைக் கைப்பற்ற அல்லது பொருளாதார வளத்தை அழிக்க படையெடுப்பு நடக்கலாம்.

எனினும், குறித்த ஒரு இராணுவ நடவடிக்கை என்ன நோக்கத்திற்காக நடாத்தப்படுகின்றது என்பதைச் சரியான முறையில், விரைவாகப் புரிந்து – தீர்க்க தரிசனமான முடிவுகளை எடுப்பது போராட்டத் தலைமைகளின் கைகளில் தங்கியுள்ளது. ஏனெனில், அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் எதிர்கொண்டு போராடும் சக்தி – தனது உச்சவளர்ச்சி நிலையை அடையும்வரை – ஒரு விடுதலைச்சேனைக்கு இருக்கமாட்டாது. எனவே, எதிர்த்துப் போராட வேண்டியதை இனங்கண்டு, எதிர்கொண்டு – மற்றையவைகளைத் தவிர்த்து – ஒதுங்கும் முடிவுகளை போராட்டத் தலைமைகள் எடுக்கும். எதிர்த்துப் போராட வேண்டிய படையெடுப்புக்களை எவ்வாறு எதிர் கொள்வது! எத்தகைய தந்திரோபாயங்களை பயன்படுத்துவது என்றும் அவை தீர்க்கமாக முடிவெடுக்கும்.

எதிரியின் திசைதிருப்பல் முயற்சிகளுக்கும் மத்தியில், படையெடுப்புக்களின் உண்மையான நோக்கங்களை கண்டறிவது இலகுவான காரியமல்ல. அப்படியும் இருக்கலாம்! அல்லது இப்படியும் இருக்கலாம்! என்ற பாணியில் ஒரு விடுதலைச் சேனையின் தலைவன் முடிவெடுக்க முடியாது. ஏனெனில், படையெடுப்பை எதிர்கொள்ளப் போகும் விடுதலைச் சேனையின் தலைமைத் தளபதி அவர்தான். எனவே, ஊகங்களை அல்ல, முடிவுகளை எடுக்க வேண்டும். 'இதுதான் அதன் நோக்கம்' என்று உறுதியாக எதிர்வுகூறி – அதற்கேற்றவாறு செயற்படும் சிக்கலான பணி அந்தத் தலைமைக்கு உண்டு.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தளவில் இந்தச் சிக்கலான பணியை, தலைவர் பிரபாகரன், வெகுகச்சிதமாக ஆற்றிவருகின்றார். இந்திய – சிங்கள படையெடுப்புக்களின் நோக்கங்களை – அதன் தன்மைகளை சரியாக உய்த்துணர்ந்து – விவேகமான முடிவுகளை எடுத்து எதிர்ப்பதை எதிர்த்து, தவிர்ப்பதை தவிர்த்து போராட்டத்தை வெற்றிப் பாதையிலேயே கொண்டு நடாத்துகின்றார்.

நூறிற்கும் மேற்பட்ட 'பல்வேறு நோக்கங்களைக் கொண்ட' இராணுவ நடவடிக்கைகளை புலிகள் இயக்கம் சந்தித்துவிட்டது. 1987 நடுப்பகுதியில் வடமராட்சி மீது நடாத்தப்பட்ட 'ஒப்பறேசன் லிபறேசன்' தமிழ் மக்களை மிரட்டிய முதலாவது இராணுவ நடவடிக்கையாகும். சரியாகப் 10 ஆண்டுகளின் பின்னர் கடைசியாக ஜெயசிக்குறுய் மக்களை மிரட்டிக் கொண்டிருக்கின்றது.

இதில் இந்திய ஆக்கிரமிப்பின் தலைவிதியை நிர்ணயித்த 'செக்மேற்' முக்கியமான ஒன்று. இந்த நடவடிக்கையின் நோக்கத்தை இந்திய அரசு பகிரங்கமாகவே அறிவித்தது. இந்த நடவடிக்கையை எதிர்கொள்வதற்கு தலைவர் பிரபாகரனுக்கு இரண்டே இரண்டு தெரிவுகள் மட்டுமே இருந்தன.

ஒன்று, சரணடைவது. இரண்டு, சாகும்வரை போராடுவது. தலைவர் இரண்டாவதை சந்திக்க முடிவெடுத்தார். களத்தை நேரடியாக வழிநடாத்தினார். வரலாற்றைப் படைத்தார். அதுபோல 'றிவிரச' என்ற யாழ்ப்பாணப் படையெடுப்பும் புலிகள் இயக்கம் சந்தித்த முக்கிய ஒரு படையெடுப்பாகும். குடாநாட்டின் புவியியல் சிறைக்குள் ஒரு மரபுவழிப்போரை நடாத்தி புலிப்படையின் ஆட்பலத்தை அழித்து – பெருந்தொகை மக்களையும் கொன்று – போராடினால் இதுதான் நடக்கும் என்ற பாடத்தை படிப்பித்து விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க அரசு முடிவெடுத்திருந்தது. சதி இழைகளால் பின்னப்பட்ட, எதிரியின் கோரமான தந்திரோபாய வலைக்குள் இருந்து – தலைவர் அவர்கள் – புலிப்படையின் ஆட்பலத்தையும் பாதுகாத்து, அதேவேளை, ஆக்கிரமிப்புப் படைகளுக்கு கணிசமான ஆள் இழப்பையும் ஏற்படுத்தி போராட்டத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கின்றார்.

அதேவேளை, மன்னார் பெருநிலப்பரப்பினூடாக 'எடிபல' செல்லத் தொடங்கியபோது அதன் நோக்கங்களையும், அந்த நோக்கத்தின் சாதக – பாதக விளைவுகளையும் ஆராய்ந்து பார்த்த தலைவர் அவர்கள், இறுதியில், 'எடிபல'வை போக அனுமதித்து – புலிவீரர்களை ஒதுங்கியிருக்கப் பணித்தார்.

ஆனால், இப்போது ஜெயசிக்குறுயை படையினர் ஆரம்பித்தபோது, அதை வேறுவிதமாக எதிர்கொள்ள அவர் முடிவெடுத்தார். அதனுடைய பலாபலன்களை உலகம் காணத் தொடங்கிவிட்டது.

"எதிரியின் பலவீனத்தை அறி – ஓங்கி அதிலேயே அடி" என்பது தலைவரின் செயல் மந்திரம். கொக்கின் குணத்தைப் போலவே ஓடுமீன்களை ஓடவிட்டு, தனது அலகு வீச்சிற்குள், தரித்து நிற்கும் (உறு) மீன்கள் வரும்வரை, கொக்கு (வாடி) காத்திருக்கும்.

"ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரையும் வாடியிருக்குமாம் கொக்கு – இது தமிழ்ப் பொன்மொழி.

'எடிபல' மீன் ஓடி 'ஜெயசிக்குறுய்' மீன் வரும்வரை வாடி இருந்ததாம் புலிப்படை.

– இது புலிகளின் இராணுவப் பொன்மொழி. ◆

**எதிரியின் திசைதிருப்பல் முயற்சிகளின் மத்தியில், படையெடுப்புக்களின் உண்மையான நோக்கங்களை கண்டறிவது இலகுவான காரியமல்ல. அப்படியும் இருக்கலாம்! அல்லது இப்படியும் இருக்கலாம்! என்ற பாணியில் ஒரு விடுதலைச் சேனையின் தலைவன் முடிவெடுக்க முடியாது. ஊகங்களை விடுத்து, "இதுதான் அதன் நோக்கம்" என்று உறுதியாக எதிர்வுகூறி செயற்படும் சிக்கலான பணி அந்தத் தலைமைக்கு உண்டு.**

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தளவில் இந்தச் சிக்கலான பணியை, தலைவர் பிரபாகரன், வெகு கச்சிதமாக ஆற்றிவருகின்றார்.**

# வாழ்க்கை அவளுக்கும்.....

"ரீச்சர்" உணர்ச்சிவசப்பட்டவளாய் தன்னையறியாமலே மேகலா ரீச்சரின் கைகளைப் பற்றிக்கொண்டாள் நிவேதிகா. நிவேதிகாவின் கையை நட்புடன் அழுத்திய ரீச்சர் தொடர்ந்தார்.

"சமூக அந்தஸ்துக்காகவும் பாதுகாப்புக்காகவும் மட்டுமே என்னைப் பற்றிச் சரியாப் புரிந்துகொள்ளாத ஒருத்தரைக் காசுகொடுத்து கலியாணம் செய்து நரக வாழ்க்கை வாழ என்னால ஏலாது. ஆழமான புரிந்துணர்வோடு வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒருத்தர்தான் எனக்குத்தேவை"

"ரீச்சர், எனக்கு வடிவா விளங்குது. ஆனால் ஒண்டுமே விளங்காமல் உங்களைப்பற்றி தேவையில்லாத கதையள் கதைக்கிறதை தான் என்னாலை...."

"உது தவிர்க்க முடியாது நிவேதிகா. நான் நானாகத்தான் வாழவேணும் எண்டு நினைக்கிற பெண்கள் கடைசிக்கட்டத்தில உடைஞ்சுபோறது இந்த முதுகெலும்பில்லாதவையின்ர வாய்க்குப் பயந்துதான். ஆனா எனக்கு அதைத் தாங்கிற பலம் இருக்குது. என்னைப்பற்றிக் கதைக்கிற ஆக்களைப் பரிதாபத்துக்குரிய அப்பாவியாகத்தான் நான் பாக்கிறன்"

நிவேதிகாவுக்கு ரீச்சரிடம் மேலதிகமாக எதுவுமே பேசத் தோன்றவில்லை. தன் மதிப்புக்குரிய ரீச்சரை மானசீகமாகப் புரிந்துகொண்ட, கலவையான உணர்வுக் கொந்தளிப்பால் கனமாகிப்போன மனத்துடன் மௌனமாக விடைபெற்றாள்.

"டிங், டிங்" என முன்னறையில் கடிகாரம் ஒலித்தபோதுதான் மணி இரண்டாகி விட்டதை உணர்ந்து, நினைவுகளிலிருந்து திரும்பினாள் நிவேதிகா.

இவள் இப்போது ஒரு ஆசிரியை தன்னைத்தானே ஆளுமைப்படுத்தி வளரும் ஒரு வித்தியாசமான பெண்.

நிவேதிகாவுக்கு அப்பா பாத்துப் பேசிய மாப்பிள்ளைதான் அவள் மேசையில் உள்ள புகைப்படத்தில் இருப்பவர். அவர் ஒரு நகைக்கடை உரிமை யாளர்.அழகானவர். அவரது பெயர் ஜீவகன். இவளுக்கு அவரைப்பற்றித் தெரிந்தது அவ்வளவுதான். அதற்குமேல் அவரிடம் இவளால் எதை எதிர்பார்க்க முடியும்? அப்பா படத்தைத் தந்து "பிடிச்சிருக்குதோ பிள்ளை" என்று கேட்டபோது பதிலே சொல்லாமல் அப்பாவைப் பார்த்துக்கொண்டு நின்றாள். அப்பா என்ன நினைத்தாரோ தெரியவில்லை. அவளருகில் வந்து மெதுவாகச் சொன்னார்.

"பிள்ளை உதுமாதிரி ஒரு சம்மந்தம் இனிக் கூடிவாறதெண்டால் இனிக் கஸ்ரம். அவை கனக்க ஒண்டும் கேக்கேல்ல. ஆனா..."

சொன்னதை முடிக்காமல் அவளைப் பார்த்தார். "அவைக்குச் சொத்துப்பத்து எக்கச் சக்கம். நீ வேலை பார்த்துத்தான் ஆகவேணும் எண்டில்லை எண்டு அவை நினைக்கினம்".

வானத்தில் இடித்தஇடி தன் தலையில் விழுந்து சிதறியதுபோல், உலகம் ஒருதரம் 'கிர்' என்று சுத்தியது. நிவேதிகா அப்படியே நின்றாள். அவளின் கலக்கம் அப்பாவை குழப்பியிருக்க வேணும்.

"பிள்ளை நிவேதி, யோசிச்சுப்போட்டு காலமை நீ முடிவைச்சொல்லு"

அவர் சொன்ன 'காலமை' இன்னும் சில மணித்தியாலங்களில் விடியப்போகிறது.

அவளின் பதில் இத்தனை வருடம் ஓடாகத் தேய்ந்து அவளை உருவாக்கிய தந்தையின் உள்ளத்தை துள்ளச் செய்யுமா? துவளச் செய்யுமா? மீண்டும் ஜீவகனின் படத்தை எடுத்து அவன் முகத்தை ஆராய்ந்தாள் இவனுள்ளே இன்னொரு உயிரின் உணர்வை மதிக்கும் புரிந்துணர்வு இருக்குமா? இருக்காதா?

அன்பும் ஆழமான புரிந்துணர்வுமே தன் வாழ்க்கைத் துணையின் தகுதிகளாக இருக்க வேண்டுமெனக் கனவு கண்ட நிவேதி, அப்பாவின் திடீர்க் கேள்வியால் குழம்பினாள். அப்பாவுக்காகக் கண்ணை மூடிக்கொண்டு சம்மதம் கூறிவிட்டு தன்வாழ்வை நரக வாழ்வாக்க நிவேதியால் நிச்சயம் முடியாது என எண்ணிய கணத்தில் அந்தச் சிந்தனை சட்டெனப் பளிச்சிட்டது. அதுதான் சரி மீண்டும் மீண்டும் அதுதான் சரியெனப் படவே, அதுவே அவள் முடிவாயிற்று.

காலையில் எதிர்பார்ப்போடு அவள் முகத்தை எதிர் நோக்கப்போகும் அப்பா, அவளின் வாழ்வில் அக்கறையுள்ளவர். அவருக்கு நிவேதியைக் கொஞ்சமேனும் புரியும். ஆனால் அவளோடு வாழ்வைப் பகிரப்போகும் ஜீவகனுக்கு...?

அப்பாவுக்குப் பதில் கூறுமுன் ஜீவகனை நேரில் சந்தித்து மனம்விட்டுப் பேசினால்...? ஆமாம் அதன்பிறகு என்முடிவுக்கு நான்தானே சொந்தம்.

"நான் நானாக வாழவேணுமெண்டால், என்னை நான்தான் ஆளுமைப்படுத்த வேணும்"

என்று கூறும் மேகலா ரீச்சரின் சுட்டும் விழிகள் சிந்தனையில் தோன்றின.

அந்த அதிகாலையிலேயே துயிலெழுந்துவிட்ட இரு குயில்கள் முற்றத்து வேம்பில் உல்லாசமாய்க் கூவிக்கொண்டிருந்தன. ✳

www.tamilarangam.net



# நினைவில் நிறைந்த தோழிகள்



**லெப். கேணல் மதனா**
கருணாதேவி நாகேந்திரம்
மட்டக்களப்பு.
பிறப்பு: –1975. 06. 06
வீரச்சாவு:–1997. 03. 06

## வவுணதீவில் வரலாறு எழுதியவள்

மட்டக்களப்பில் போராட்டத்துக்கு மேன்மேலும் ஆளணியைச் சேர்ப்பதில் ஈடுபட்டு, பயிற்சி வழங்கி, படையணியைக் கட்டி வளர்த்ததில் அவள் பங்கு குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டம் இவர்களுக்கு மிகவும் வேதனையும், சோதனையும் நிறைந்த காலமாகவே இருந்தது. மட்டுநகர் காடுகளை சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுமுழுதாக ஆக்கிரமித்திருந்த காலமது. அடிப்படை வசதிகள்கூட இன்றிய நிலையில், நம்பிக்கையும் மனவுறுதியும் மட்டும் பலமாகக் கொண்ட தருணங்களில் மதனா ஒருபோதும் சோர்வடைந்ததில்லை. தனது தோழிகளுக்குத் தெம்பூட்டி உற்சாகப்படுத்துவாள்.

இதன் பின்னர் படையணியைத் திரட்டி, அப்படையணிகள் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்களில் பங்குபற்ற வகைசெய்தாள்.

கட்டுமுறிவு இராணுவமுகாம் தகர்ப்பு, தரவைக்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு, 4 ஆம் முச்சந்தி இராணுவமுகாம் தகர்ப்பு போன்ற பாரிய தாக்குதல்களிலும் அனைத்து பதுங்கித்தாக்குதல்களிலும் திறம்பட செயலாற்றினாள். 4 ஆம் முச்சந்தி முகாம் தாக்குதலின்போது கப்டன் அன்பரசி வீரச்சாவடைந்தாள். அன்பரசி ஒரு சுறுசுறுப்பான விவேகமான போராளி. இவளும் மதனாவுடன் சேர்ந்து படையணியின் வளர்ச்சிக்கு தோளோடு தோள் கொடுத்து உதவியவள். இவளது ஞாபகமாகவே மட்டு அம்பாறை மகளிர் படையணிக்கு அன்பரசி படையணி என்று பெயர் சூட்டப்பட்டது. மதனாவினது சுறுசுறுப்பையும், துணிவையும், புத்துணர்வையும், களங்களில் படைநடத்தும் திறமையையும் கண்ணுற்ற முதுநிலைப் படைத்துறை ஆணையாளருள் ஒருவரான கருணா அம்மான் அவர்கள் மதனாவை அன்பரசி படையணியின் சிறப்புத்தளபதியாக நியமித்தார்.

அன்போடும் அரவணைப்போடும் தன் தோழிகளுடன் ஆடிப்பாடி மகிழ்வாள். முகாமில் தாயாகவும் கடமையில் கண்ணியமாகவும், களத்தில் படை நடத்தும் தளபதியாகவும் நின்று போராளிகளை வழி நடத்திக் கொண்டிருந்தாள். இவளுக்கு சக தோழிகளுடன் சேர்ந்து விளையாடுவதென்றாலே அலாதிப்பிரியம். பின்னேரம் நான்கு மணியாகிவிட்டால் தன் படையணியினரை முகாமில் தங்க விடமாட்டாள். கால்பந்து, கைப்பந்து, கிரிக்கெட், வட்டக்காவடி எனப் பல்வேறு விளையாட்டுக்களை சகதோழியர் அனைவரையுமே விளையாடுவதற்கு உற்சாகப்படுத்தி தானும் சேர்ந்து விளையாடுவாள். இதனால் ஒவ்வொரு போராளியின் மனநிலையும் சமநிலைப்படுகின்றது என்பது அவளின் எண்ணம்.

மதனா பங்குபற்றிய தாக்குதல்களில் மக்கள் நிறைந்து வாழும் சந்தவெளி, முறக்கொட்டாஞ்சேனை, மாவடிவேம்பு ஆகிய இடங்களில் ரோந்துசென்ற சிங்கள இராணுவத்தினர்மீது மேற்கொண்ட தாக்குதல்கள் மக்கள் மனதில் இடம் பிடித்தன. இதில் பெருமளவு எதிரிகளும் இராணுவ தளபாடங்களும் அழிக்கப் பட்டன. மதனாவின் வழிநடத்தலில் பெண்புலிகளின் வீரம்கண்டு எதிரி அதிர்ந்தான். மக்கள் அதிசயித்தனர். புளுகுணாவி வெற்றிச்சமரிலும் மதனா தனது படையணியினருடன் பெரும் பங்காற்றினாள். மட்டக்களப்பில் இவளின் பாதம் படாத மண்ணே இல்லையெனலாம். கிழக்குக் காடுகளின் காட்டுமரங்கள், மலைகள், அருவிகள் அத்தனையும் இவளை அறியும்.

1997. 03. 05 இல் கஜபாகு சிறப்புப்படையினர் நிலைகொண்டிருந்த வவுணதீவு ஆக்கிரமிப்பு இராணுவமுகாம் மீதான தாக்குதலில் இவளது அணிக்கு ஒரு இலக்குக்கொடுக்கப்பட்டது. அதிகாலை 1.05 மணிக்கு சண்டை ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து எட்டுமணி நேரம் உக்கிரமோதல் தொடர்ந்தது. நூறுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் எஞ்சிய எதிரிகள் திகில் அடைந்து ஓடத்தொடங்கினர். தனக்குக் கொடுக்கப்பட்ட பகுதியை வெற்றிகரமாகக் கைப்பற்றிய மதனாவின் குரல் ஆர்வத்துடன் தொலைத்தொடர்பு சாதனத்தில் ஒலித்தது.

"நாங்கள் எங்கள் பகுதியை முற்றாகப்பிடித்து கிளியர்பண்ணி விட்டோம்."

களத்தில் அவளது பணி முடிந்தபின்னர் கூவிச்சென்ற எறிகணை ஒன்று இவளது உயிரைப் பறித்துக்கொண்டது. காயம்பட்ட தோழி ஒருத்தி மதனாவின் உடலைச் சுமந்தபடி வந்து கொண்டிருந்தாள்.

மதனா......... மகளிர் படைநடத்திய இளைய தளபதி அவள். அவளது பெயர் சொல்ல இன்று நீண்டஅணியாய் அவர்கள்.

> மதனா பங்குபற்றிய தாக்குதல்களில் மக்கள் நிறைந்து வாழும் சந்தவெளி, முறக்கொட்டாஞ்சேனை, மாவடிவேம்பு ஆகிய இடங்களில் ரோந்துசென்ற சிங்கள இராணுவத்தினர்மீது மேற்கொண்ட தாக்குதல்கள் மக்கள் மனதில் இடம் பிடித்தன. இதில் பெருமளவு எதிரிகளும் இராணுவ தளபாடங்களும் அழிக்கப்பட்டன. மதனாவின் வழிநடத்தலில் பெண்புலிகளின் வீரம்கண்டு எதிரி அதிர்ந்தான். மக்கள் அதிசயித்தனர். புளுகுணாவி வெற்றிச்சமரிலும் மதனா தனது படையணியினருடன் பெரும் பங்காற்றினாள். மட்டக்களப்பில் இவளின் பாதம் படாத மண்ணே இல்லையெனலாம். கிழக்குக் காடுகளின் காட்டுமரங்கள், மலைகள், அருவிகள் அத்தனையும் இவளை அறியும்.

## தாயகமண்ணின் காற்றே

வானதி குடும்பக்கூட்டுக்குள் வாழ்ந்த நாட்கள் மிகக்குறைவு. வீட்டின் பொருளாதார நெருக்கடி மிகுந்த நிலைமையில் அவள் பெற்றோரிடமிருந்து பிரிய நேர்ந்தது. பாடசாலையில் வெண்சிட்டாகக் கழியவேண்டிய பள்ளிப் பருவம் ஒரு வீட்டில் வேலையாளாக நின்ற நாட்களில் தொலைந்து போனதும், தான் நீண்ட படிப்பெல்லாம் படிக்கவேண்டும் என்ற கனவு கலைந்து போனதும் அவளுக்கு மிகுந்த கவலைதான்.



**கடற்கரும்புலி கப்டன் வானதி**
கலைவாணி பாலராஜா
தருமபுரம்.
பிறப்பு:–1977. 01. 02
வீரச்சாவு:–1997. 03. 24

சிறுவயதிலேயே சுமக்கமுடியாத சுமைகளைத் தாங்கியதால் ஏற்பட்ட மனமுதிர்ச்சியும் இளமை வாழ்க்கையில் இழையோடிப்போன துன்பமும் அவளைப் பின்வந்த காலங்களில் நிமிர வைத்தன என்பது உண்மைதான். ஆனாலும் அவளுக்குள் இருந்த ஆழ்ந்த சோகம் முகத்திலோ, பேச்சிலோ வெளிப்பட்டுத் தெரிந்ததில்லை. துருதுருவென விழிகள் உருள எப்போதுமே சிரித்தபடி திரியும் கலகலப்பான போராளிக்குள்ளே அபூர்வமான ஒரு ஆளுமை இருந்தது. எல்லோரிடமும் நேசம் கொள்ளுகின்ற பண்பு இருந்தது.

இயக்கத்தின்மீது அவள் கொண்ட பற்றும், விசுவாசமும் எப்போதும் உணர்வுபூர்வமாகச் சிந்திக்கின்ற அவள் மனோபாவமும் எங்கள் நெஞ்சங்களை விட்டு ஒருபோதும் அகலப்போவதில்லை.

அந்தக் கடைசி நாட்களில், அவள் இலக்கில் போய் வெடிக்கின்ற இறுதிக்காலங்களில் மட்டும் சிறுவயதிலே விட்டுப் பிரிந்த தாயையும் வெகுதூரத்தில் இருக்கும் தந்தையையும் நினைத்து மனதுக்குள் அழுதாளோ! அவளது முகத்தில் அந்தப் பிரிவின் வேதனை அப்பட்டமாகத் தெரிந்தது.

கடற்புலிகள் மகளிர் படையணியின் முதலாவது பயிற்சி முகாமில் அவள் குறிப்பிடத்தக்க திறமைவாய்ந்த போராளி. முதன் முதலில் கடற்புலிகள் மகளிர் படையணிக்குக் கொடுக்கப்பட்ட 50கலிபர் 1 அவளுக்குக் கிடைத்தது. அதனுடன்தான் அவளது கடல்வாழ்க்கை, கடற்சண்டைகள் இடம்பெற்றன. ஆரம்பத்தில் கிளாலியில் மக்கள் பாதுகாப்புப் பணியிலும், இன்னும் இடம்பெற்ற முக்கியமான சண்டைகளிலும் அவளது 50 கலிபர் ரவைகள் கக்கின.

1995. 10. 12இல் முல்லைத்தீவுக் கடலில் வைத்து தரையிறங்கும் கப்பல் மீதான தாக்குதலிலும் இவள் சண்டையில் நின்றாள். இச்சண்டையில் லெப். கேணல் இளநிலா வீரச்சாவடைந்தது குறிப்பிடத்தக்கது.

முல்லைச்சமருக்குப்பின்தான் இவளுக்குக் கரும்புலிப்படகு கொடுக்கப்பட்டது. அதற்குப்பின் வந்த நாட்களில் அவளது தீவிரம் அதிகமாகியது. அவளது படகில் மிகுந்த கவனம் செலுத்தினாள். எத்தனை மைல்கள் நடந்துசென்றும் படகைக் கவனித்து, பழுதுபார்த்து படகை ஒரு உயிருள்ள பொருளாகவே நடத்துவதை பலசந்தர்ப்பங்களில் நாம் அவளிடம் அவதானித்தோம். வானதி இறுதியாக எழுதி வைத்துவிட்டுச் சென்ற கடிதத்திலும், செயற்பாடுகளிலும் அதனிடம் அவள் கொண்டுள்ள பொறுப்பும் கவனமும் விளங்கியது.

திருமலைத் துறைமுகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படைக் கப்பலொன்றின்மீது 1997. 03. 24 அன்று கடற்புலிகள் தொடுத்த தாக்குதலில் கரும்புலிப்படகோடு சென்ற வானதி திரும்பி வரவேயில்லை. உலகவான் அலைகளில் கடற்சமர் எனப் பெயர் சொல்லி அழைக்கப்பட்ட அந்தச் சண்டையிலேயே அவளது இலக்கில் போய் இடித்தாள்.

"தாயக மண்ணின் காற்றே என்னில் வீசம்மா"

பாடல்வரிகளை காற்றள்ளி வந்தது. ஆனால் அவள் இல்லை. மூசி எறியும் கடலலைகளைப்போல மேடையிலே விரும்பிப்பாடுகின்ற பாட்டைக் கேட்பதற்கு அவள் வரவில்லை. "கரும்புலி இவள்பாடும் பாடல்" மட்டும் இன்னும் கேட்கிறது.

## சின்னச் சிட்டுக் குருவி

கலைவள்ளி சின்ன உருவம். அணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வரிசையாக நின்றால், எந்தஅணிக்குள் நின்றாலும் அவள் முதலாவதாகத்தான் நிற்க வேண்டியிருக்கும். அதுவே அவளுக்குக் கவலை. தான் கட்டையாக இருக்கின்றேனே என்பதில் தன்னிரக்கம்.

இவர்களது அணிகளுக்குக் கனரக ஆயுதங்கள் கொடுக்கப்படும் நேரங்களில் அவளைப் பார்க்கப் பாவமாக இருக்கும். "பிப்ரியோ? அதெல்லாம் ஏன் எனக்குத் தரப்போயினம்?" என்று ஏக்கத்தோடு பார்த்தபடியே ஒதுங்கிக்கொள்வாள்.

வீட்டில் ஒன்பது குழந்தைகளும் கலகலப்பை ஊட்ட, வீட்டுக்குள் குருவிக்கூட்டம் போலப் பாடித்திரிந்த அவளது வாழ்க்கையின் இறுதி நாட்களில் அவளது சகோதரர்கள் ஒருவரும் அருகிலில்லை. அது அவளுக்கு மிகுந்த கவலை. கடைசியாக அவளது பெற்றோர்களுக்கும்

தொடர்ச்சி 12ம் பக்கம்......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினாறு

(தொடர்ச்சி)

**அ**வன் தன் தாடையைச் சொறிந்தபடியே புன்னகைத்துக் கொண்டான். கௌரவ மாகத் தோற்றமளிக்கும் டென்மாக்கிய கப்பல் கப்டன்களைப் போல் நிச்சயமாக அவன் தோற்றமளிக்கவில்லை எனக் கரேன் நினைத்துக் கொண்டாள். அவன் கடுமையாக நடப்பது போல் பாவனை காட்டுவது அவளுக்குப் புரிந்தது.

"நீ ஒரு அருமையான குழந்தை, உனக்கு ஏதாவது தேவைப்பட்டால் ஏணியால் வந்து நேராக என்னிடம்கேள். கொஞ்சம் மரியாதையாகக் கேட்பாயா?" என்றான் கனிவாக.

"நன்றி கப்டன்"

"பரவாயில்லை. நீ என்னை பில் என்றே அழைக்கலாம். நாங்கள் எல்லாரும் ஓரினத்தவர் அல்லவா?"

அவன் ஏணியால் ஏறிச் செல்வ தைப்பார்த்தபடியே இருந்தாள், கரேன். விடியற்காலையில் முதல் ஒளிக்கதிர்கள் தழுவிக்கொண்டன. கார்பத்தோஸ் தான் எவ்வளவு ஆட்களை தாங்கிக்கொள்ள முடியுமோ, அவ்வளவு தொகையினரை, கிட்டத்தட்ட 1600 பேரைத் தன் ஒவ்வொரு அங்குலத்திலும் தாங்கிக் கொண்டிருந்தது. அரைவாசி துருப் பிடித்துப் போயிருந்த நங்கூரமொன்று கப்பலில் மரத்தாலான பக்க வாட்டுப்பகுதியில் மோதிக் கொண்டி ருந்தது. நாற்பத்தைந்து வருடப் பழமையான கப்பலின் இயந்திரங்கள் வேண்டா வெறுப்பாக இரைந்து கொண்டே திக்கித்திணறி வேலை செய்யத் தொடங்கின. கடவுள் அளித்த உருமறைப்புப் போல் ஒரு பனிமண்டலம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. பிரான்சின் கரைகளை விட்டு தன்னுடைய உயர்மட்ட வேகமான மணிக்கு 7 நொட்ஸ் (கடல் மைல்கள்) வேகத்தில் அந்தப் பழைய கப்பல் விலகி விரைந்து செல்லத் தொடங்கியது. சில நேரத்தின் பின் வழமையான 3 மைல் பிராந்தியத்தை விட்டு விலகி, பொதுக்கடற் பரப்பினுட் சென்று விட்டது. முதலாவது சுற்றுவட்டம் மொசாட் அலியா பெற்றினால் வெல்லப்பட்டு விட்டது. கொடிக்கம்பத்தில் நீல, வெள்ளை யூதக் கொடியேற்றப்பட்டு, பெயரையும் "ஸ்டார் ஒவ் டேவிட்" (star of david) என மாற்றிக்கொண்டது.

கப்பல் தூக்கியெறிந்து சென்று கொண்டிருந்தது. காற்றோட்டம் குறை வாக இருந்ததால் அளவுக்கதிகமாகக் கீழ்த்தளத்தில் நிரப்பப்பட்டிருந்த மக்கள் வெளிறிப்போயினர்.

பால்மாக் குழுக்களோடு கூட, பிள்ளைகட்கும் மற்றவர்கட்கும் தேசிக்காய் கொடுத்து, வாந்தியெடுப்பதைத் தவிர்க்க முயற்சித்தாள். அது முடியாமல் போன போது, வாந்தியெடுத்ததை விரைவாக சுத்தம் பண்ணுவதிலீடுபட்டாள். ஆயினும் பாட்டுக்களைப் பாடுவதும், விகடமான கதைகளைச் சொல்வதிலும் புதிய சில விளையாட்டுக்களில் ஈடுபடுவதும் நிலைமையைச் சிறிது எளிதாக்கும் என உணர்ந்து கொண்டாள்.

அவள் பிள்ளைகளை ஒரு ஒழுங்குக்குள் கொண்டு வந்திருந்தாலும், மதிய மாகியபோது, வெப்பம் மிகக்கூடிக் குறை வெளிச்சத்திலிருந்த தளத்தின் உள்ளிருந்த காற்றும், மனித வியர்வையாலும், வாந்தியினாலும் தாங்க முடியாத துர்நாற்றத்துடன் கூடியதாக மாறி விட்டது. ஆண்கள் அரைக் காற்சட்டையைத் தவிர மற்றவற்றைக் கழற்றினர், பெண்கள் மார்புக் கச்சை மட்டத்துக்கு ஆடைகளையகற்றி விட்டனர். வியர்வை வெள்ளத்தினால் உடல்கள் மினுங்கின. பலர் மூர்ச்சையடையத் தொடங்கினர். மயங்கிப் போனவர்கள் மட்டும் மேல் தளத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். எல்லோரையும் எடுத்துச் செல்லும் அளவுக்கு இடமிருக்கவில்லை.

லாசியோடாட்டில் அகதிகளாயிருந்த வர்களான மூன்று டாக்டர்களும் நான்கு தாதிகளும், மிகக் கடுமையாக வேலையிலீடுபட்டனர். பிள்ளைகளை எப்படியாவது சாப்பிட வைக்க அவர்கள் உத்தரவிட்டனர். கரேன் தனது குழந்தைகட்குப் படாதபாடுபட்டு உணவை உட்செலுத்தி விட்டாள். மாலையானபோது, தூக்க மருந்து களையும் (Sedatives) கொடுத்து, உடல்களை ஈரத்துணியினால் துடைத்து விட்டாள். நீர் மிகக் குறைவாக இருந்த




காரணத்தினால், நன்றாகக் கழுவி விட முடியவில்லை.

கடைசியாக சூரிய அஸ்தமனத்துடன் சிறிதளவு காற்று, கீழ்த் தளத்தினுள் புகுந்தது. மிகக் களைப்படையும் வரை கரேன் வேலை செய்திருந்ததால், எதையும் கூர்மையாகச் சிந்தித்துப் பார்ப்பதற்குத் திறனற்ற வகையில், கரேனுடைய மனம் பனிமூட்டத்தினுள் இருப்பது போலிருந்தது. அவள் தன்னுடைய குழந்தையிலொன்று அழும் போது துடித்தெழும்பக் கூடிய அளவில் மட்டும் அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். கப்பல் பலஸ்தீன த்துக்கான தன் பயணத்தில் எழுப்பிக்கொண்டிருந்த ஒவ்வொரு கீச்சிடும் ஒலியையும், அவள் கவனமாகச் செவிமடுத்துக்கொண்டிருந்தாள். கவலையளிக்கும் குழப்பங்களுடன் கூடிய கனவுகளால் நிறைந்திருந்த தூக்கத்தினுள் கரேன் ஆழ்ந்து விட்டபோது பொழுது புலரத் தொடங்கியிருந்தது.

திடீரெனக்கேட்ட இரைச்சலால் அவள் துடித்தெழுந்தாள். அவள் மேலே ஏணியருகே, ஏறிட்டுப் பார்த்தபோது, காலைப் பொழுதின் ஒளிக்கதிர்கள் தெரிந்தன. அவள் ஆட்களை விலக்கிக் கொண்டு மேலே வந்தாள். எல்லோரும் தங்களுக்கு மேல் நிலையாகப் பறந்து

> **தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட மக்கள் 100க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக, அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம் என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிரார்த்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.**

கொண்டிருந்த நான்கு இயந்திரங்களைக் கொண்ட குண்டு வீச்சு விமான மொன்றைச் சுட்டிக்காட்டிக் கொண்டி ருந்தனர். லங்காஸ்ரர் "இது பிரிட்டிஷ் விமானம். குண்டுவீச்சு விமானம்...." (Lancaster Bomber).

எல்லோரும் தங்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பி அமைதியாக இருங்கள்" ஒலிபெருக்கி முழங்கியது.

குழந்தைகள் பயந்து அழுது கொண்டிருந்த கீழ்த் தளத்துக்குக் கரேன் விரைந்து சென்றாள். தனனுடைய உச்சஸ்தாயி குரலில் பாட்டொன்றைப் பாட ஆரம்பித்த கரேன் குழந்தைக ளையும் அதில் பங்கெடுக்கத் தூண்டினாள்.

"பாலஸ்தீனம் நோக்கி நாங்கள் போகிறோம்.

காணப்போகும் மகிழ்ச்சியிலே நாங்கள் நீந்துகிறோம்

பாலஸ்தீனம் நோக்கி நாங்கள் போகிறோம்.

வாரும் வந்து பாடும் எங்கள் கீதமே"

"எல்லோரும் அமைதியாக இருங்கள் எந்தவித ஆபத்தும் இல்லை" ஒலிபெருக்கி திரும்பவும் கூறியது.

மதியமாகிய போது அடிவானத்தில் தோன்றிய பிரிட்டிஸ்குறுய்சர் (Cruiser) ரகப் போர்க் கப்பலான "எச். எம். எஸ் டிவையன்ஸ் (H.M.S Defiance)" இன் எச்சரிக்கை விளக்குகள் மின்ன "ஸ்டார் ஒவ் டேவிட்" ஐ நோக்கி விரைந்து வந்தது. ஒடுக்கமான வடிவமைப்பைக் கொண்ட சிறிய ரக நாசகாரியான எச். எம். எஸ். பிளக்லியை (H. M. S. Blakely) டிவைன்ஸ் ஒடு இணைந்து கொண்டது.

**லியோன் யூறிஸ்**

இரு போர்க் கப்பல்களும் இந்தப் பழைய கப்பல் போய்க் கொண்டிருந்த இடங்களை அண்மித்துச் சஞ்சரித்துக் கொண்டிருந்தன.

"எங்களுடைய ராஜரீக காவலர்கள் வந்துவிட்டார்கள்." ஒலிபெருக்கியில் பில்பிறை சொன்னான். அங்கு நடந்து கொண்டிருந்த விளையாட்டின் விதிக ளின்படி போட்டி முடிந்து விட்டது. அலியா பெற் ஒரு கப்பலை ஐரொப்பாவிலிருந்து பெருங்கடலினுள் கொண்டு வந்து விட்டது. பலஸ்தீனத்தின் அண்மையான மூன்று மைல் கடற் பிராந்தியத்தினுள் ஸ்டார் ஒவ் டேவிட் பிரவேசித்ததும் பிரித்தானிய அதிகாரிகள் ஏறிக், கப்பலைக் கைபாவுக்கு (Haifa) இழுத்துச் செல்வார்கள்.

"ஸ்டார் ஒவ் டேவிட்" தளத்திலிருந்த அகதிகள் போர்க்கப்பல்களை நோக்கி ஏளனக் கூச்சலிட்டு, பெவினையும் சபித்துக் கொண்டிருந்தனர்.

"ஹிட்லர் எங்களைக் கொலை செய்தான்."

"பிரிட்டிஸ்காரர் எங்களை வாழ விடமாட்டார்கள்." என்ற வாசகங்களை பெரிய அளவில் கொண்ட பதாகை யொன்று ஏற்றப்பட்டது. பிரிட்டிஸ் போர்க்கப்பல்களோ இதைக் கணக்கில் எடுக்கவும் இல்லை. பலர் எதிர்பார்த்ததுபோல் புதுமையாக மறைந்து போய்விடவும் இல்லை, குழந்தைகள் அமைதியாகிவிட்டதும் சிந்திப்பதற்குக் கரேனுக்குப் பல விஷயங்கள் இருந்தன. காற்றோட்டக் குறைவினால் பலர் பாதிக்கப்பட்டிருந்தனர். மெதுவாக, அவள் தன்னைச் சுற்றிலும் பிணைத்துக்கொண்டிருந்த கைகள், கால்கள், தோள்பைகள் ஆகியவற்றை விலக்கிக் கொண்டு மெதுவாக மேற் பகுதிக்கு வந்தாள். கப்பலில் செலுத்தும் பகுதியில் கோப்பியை உறிஞ்சியபடியே பில்பிறை கீழே தளத்திலிருந்த நெருக்கமான மக்கள் தொகையைப் பாத்தபடியிருந்தான். பால்மாக் தலைவன் அவனோடு ஏதோ வாதாடிக் கொண்டிருந்தான்.

"யேசுகிறீஸ்துவே" பில் பெரிதாகப் புறுபுறுத்தான்.

"யூதர்களுக்கு எதையும் வாதாடித்தான் தீரவேண்டும். உங்கள் கட்டளைகளை ஆராய முடியாது அமைந்து போகத்தான் கட்டளைகள் கொடுப்பீர்கள். எல்லா வற்றையும் வாதாடி முடிக்க வேண்டுமானால், எப்படிக் காரியங்களைச் சாதிக்கப் போகிறீர்கள். ஒன்றை மட்டும் தெரிந்துகொள். இங்கு கப்பலின் கப்டன் நான்தான்" என்றான் உரத்து.

பில்லுடைய அறைகூவல் பால்மாக் தலைவனுடைய வாதாட்டத்தைச் சிறிதும் பாதிக்கவில்லை. அவன் சொல்ல வேண்டிய அவ்வளவையும் சொல்லி விட்டே நகர்ந்தான். பில் முணுமுணுத்துக் கொண்டே ஒரு சுருட்டைப் பற்ற வைத்தவன், கதவடியில் ஓரமாக ஒதுங்கிக் கொண்டு நின்ற கரேனைக் கண்டான்.

"வா, கரேன். கோப்பி சிறிது குடிக்கிறாயா?"

"கொஞ்சம் குடிக்கலாம்."

"உன் தோற்றம் சரியாயில்லை"

"பிள்ளைகளின் வேலைகளால் அதிகம் நித்திரை கொள்ள முடியவில்லை."

"உண்மைதான் பிள்ளைகளோடு எப்படிப்போகிறது?"

தொடரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுகதை

## வாழ்க்கை அவஸ்தைதான்

-சாம்பவி

அந்த இரவு அமைதியாகக் கரைந்துகொண்டிருக்க, அவள் மட்டும் மன அமைதியில்லாமல் தவித்துக்



கொண்டிருந்தாள். நித்திரைக்காகக் கண்களை மூடினாள். அது வெறும் முயற்சியாகப் படவே படுக்கையில் எழும்பிக் குந்தி, விளக்கைத் தூண்டிவிட்டு, தலைமாட்டில் கிடந்த புத்தகங்களைப் புரட்டினாள். விழிகள் வெறுமனே வரிகளைத் தடவின. இருப்புக்கொள்ளாதவளாக எரிச்சலுடன் எழுந்து ஜன்னலைத் திறந்தாள் நிவேதிகா. சில்லென்ற தென்றல் முகத்திலே மோதியது.

மூச்சை சற்று ஆழமாக இழுத்து விட்டுக்கொண்டாள். முற்றத்து மல்லிகை மொட்டு முகையவிழ்கிறது போலும். நிவேதிக்கு தன் நண்பி சுபிதாவை உடனே சந்திக்க வேண்டும்போல் இருந்தது. இந்த இரவின் அமைதியில் தன் மனக்குமுறல்களை எல்லாம் கொட்டி சுபிதாவின் மடியில் சாய்ந்து குமுறிக்குமுறி அழவேண்டும்போல் இருந்தது.

அப்படியே மேசையில் கவிழ்ந்து படுத்தாள். மனம் பாறையாகக் கனத்தது. ஏனிப்படி? தெரியவில்லை. மகிழ்ச்சியில் துள்ளவேண்டிய இதயம் ஏன் துவளுகின்றது?

ஏ "பிள்ளை நிவேதி காலமை நீ முடிவைச் சொல்லு"

அப்பா சொல்லிவிட்டார். என்ன சொல்வது? எதைச்சொல்வது? அப்பா உங்களுக்குச் சாதகமான முடிவு என் உணர்வுகளையெல்லாம் உடைத்துப் பொடிப்பொடியாக்கி ஆன்மாவையே அழித்து, வெறும் நடைப்பிணமாக்கிவிடும் என்பதை எப்படிச் சொல்வது?

'ஐயோ இரவே, நீ விடியாமலே இருந்தால், என் வாழ்வு இருளாமலே இருந்துவிடும்.' என்று நினைத்தவள் தன் விசர் நினைப்பை எண்ணி அந்தக் குழப்பத்திலும் சிரித்துக்கொண்டாள்.

மேசையில் கிடந்த கவருக்குள்ளிருந்த படத்தை எடுத்து அளவான உயரமும் அழகான சிரிப்புமாய் நின்றவனின் முகத்தில் பெருத்த ஆவலோடு எதையே தேடினாள்.

"எடி நிவேதி, மனிசற்ற மனதுக்குள்ள என்ன பூந்தா பாக்கேலும்!"

அடிக்கடி அவள் தோழி சுபிதா சொல்வது நினைவில் வர அவளை அறியாமலே வெளிப்பட்ட பெருமூச்சோடும் ஆற்றாமையோடும் அப்படத்தை மீண்டும் புத்தகத்துள் வைத்துவிட்டு அப்படியே கதிரையினுள் சாய்ந்து கொண்டு கண்களை மூடினாள். அந்த நிலவின் குளிர்ச்சியிலும் எங்கேயோ ஒரு குயில் அவலமாகக் கூவியது.

"பிள்ளை, நீ நல்லாப் படிக்கவேணும். உனக்குப் பிடிச்சமாதிரி வாழவேணும் உனக்குத்தர இதைவிட பெரிசா என்னட்டை ஒண்டுமில்லை."

'எந்தவொரு அப்பாவாலுமே தன்ர பிள்ளைக்கு இதைவிடப் பெரிசா எதையும் குடுக்கேலாது'

இப்படித்தான் தன் மனதுக்குள் நினைத்துக் கொள்வாள்.

பாடசாலை! அதுதான் அவள் எதிர்காலக் கனவுக்கு அத்திவாரமிட்ட இடம். மேகலா ரீச்சர் நிவேதிகாவின் நெஞ்சப் பதுமையில் நிறைந்துவிட்ட விருட்சம். மேகலா ரீச்சரை அவள் மதித்தாள். ரசித்தாள். நேசித்தாள். கம்பீரமாக வகுப்பறைக்குள் வரும் ரீச்சர் தன் ஆளுமையான கருத்துக்களால் முழு மாணவர் களையுமே உள்வாங்கினார். நிவேதிகா பாடங்களில் ஐயம் கேட்பதற்காக மேகலா ரீச்சரை அணுகும் போதெல்லாம் அவரின் ஆழமான சிந்தனையும் அறிவியல் ரீதியான, உணர்வுபூர்வமான அணுகு முறைகளும் நாளுக்குநாள் புதிதாய் வெளிப்பட்டன. ஆசிரியையாக இருந்தாலும் ஒரு தோழிபோல் மாணவ மாணவியரை அணுகும் தோரணையால் பலரும் தம் உணர்வுகளை ரீச்சருடன் தாராளமாகப் பகிர்ந்து கொண்டனர். எனினும் ரீச்சரின் முதுகுக்குப் பின்னால் சிலர் செய்யும் விமர்சனங்களில் ஓரிரண்டு நிவேதிகாவின் காதிலும் விழவே செய்தது.

"பாவம் ரீச்சர்! அவவுக்கு படிக்கிற காலத்தில ஏதோ காதல் தோல்வியாம்"

"இவ பெண் விடுதலை, அது இதெண்டு கதைக்கிறவ அதாலதான் இப்படியே இருக்கிறா."

"ரீச்சருக்கு ஏதோ தோசமாம். அதுதான் சாதகம் ஒன்றும் பொருந்துதில்லை."

நிவேதிகாவும் சுபிதாவும் இந்த விமர்சனங்களால் துடித்துப்போவார்கள். நித்தம் மலரும் புதுப்பூக்களாய் சிரித்துக்கொண்டு தன்னைச்சுற்றிச் சிறகடிக்கும் பள்ளிப் பறவைகளின் வாழ்வோடு லயித்துப்போயிருக்கும் மேகலா ரீச்சரின் உணர்வுகள் நன்றாகத் தெரியுமாகையால் அவரிடம் ஒருநாள் நிவேதிகா, "ரீச்சர் நான் ஒண்டு கேட்கப்போறன் பிழையா நினைப்பீங்களோ" என்றாள்.

கண்களில் குறும்பு கூத்தாட "நான் பிழையா நினைக்கிற அளவுக்கு நீர் என்ன கேட்கப்போறீர்?" என்றார் ரீச்சர்.

"உங்கட தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி" தலை குனிந்தவாறே மெதுவாய்க் கூறினாள் நிவேதி.

கலகலவென்று சிரித்த மேகலா ரீச்சர் "எனக்கு ஓரளவு விளங்குது நிவேதி. நீர் எதைப்பற்றிக் கேட்கப்போறீர் எண்டு. சரி கேளும்"

குரல் கரகரக்க, இனம் புரியாத ஒரு உணர்வோடு மெதுவாக் கேட்டாள் நிவேதி "ரீச்சர் நீங்கள் ஏன் இன்னமும் கலியாணம் செய்யேல்ல?"

இதழ்களில் மாறாத புன்னகையுடன் மேகலா ரீச்சர் காற்றிலே அசைந்தாடும் வாகை மரத்தை அண்ணாந்து பார்த்தாள்.

சில கணங்கள் அப்படியே இருந்தவள் "நிவேதிகா நான் இப்பவும் கலியாணம் செய்யத் தயார். ஆனால் என்னைக் கலியாணம் செய்யிற நிலையில இன்னொருத்தர் தயாரா இல்லாமல் நான் எப்பிடிக் கலியாணம் செய்யிறது?

அதிர்ந்துபோன நிவேதிகா ஆச்சரியத்தோடு கேட்டாள். "இதென்ன ரீச்சர் உங்களைக் கலியாணம் செய்ய யாரும் தயாரில்லாமல் இருப்பினமோ"

நிவேதியின் இதயம் காயப்பட்ட புழுவாய்த்



துடித்தது. ஏன்? ஏன்? ஏனிப்படி? என மனம் உள்ளுக்குள்ளேயே ஓலமிட்டது. தன் வழக்கமான மெல்லிய சிரிப்புடன் மேகலா ரீச்சர் தொடர்ந்தார்.

"நிவேதிகா, எங்கட சமூகத்தை நீர் இன்னும் விளங்கிக்கொள்ளேல்ல. நீர் இன்னும் சின்னப்பிள்ளையாய்த்தான் இருக்கிறீர். முந்தி நானும் உம்மைப் போலத்தான் யோசிச்சனான். ஆனால் இப்ப எல்லாத்தையுமே தாங்கிக்கொள்ளிற பக்குவத்துக்கு வந்திட்டன்.

நீர் என்னட்டக் கேட்ட இந்தக் கேள்வியை கனபேர் என்னட்டக் கேட்டுக்கொண்டுதான் இருக்கினம். ஆனால் ஒவ்வொருத்தர் கேட்கிறதும் ஒவ்வொரு விதம் அவையளுக்கெல்லாம் சிரிப்புத்தான் என்ர பதில். ஆனால் நீர், உம்மை நான் மாணவியாக மட்டும் பார்க்கேல்ல என்னை உமக்கு விளங்குமெண்டுதான் நினைக்கிறன்".

தன் உள்ளத்தைத் திறந்து கொட்டத் தொடங்கிய மேகலாரீச்சரை நிவேதிகா பார்த்துக் கொண்டிருந்தாள். சலன மேயில்லாத முகத்தில் தீட்சண்யமான விழிகள் பளபளக்க மேகலா ரீச்சர் தொடர்ந்தார்.

என்னைப் பொறுத்தவரைக்கும் என்ர கனவுகள் வித்தியாசமானது. நான் வாழ நினைக்கிற வாழ்க்கை வித்தியாசமானது. நானாகத் தெரிவுசெய்த தொழில்தான் ஆசிரியத்தொழில். இதன்மூலமாக எங்கட சமூகத்தின்ர பழைய பிற்போக்கான வழக்கங்களை மாத்தவேணுமெண்டு நினைக்கிறன். என்னைப் பொறுத்த வரைக்கும் வேலைதான் முக்கியம். இதனால கலியாணம் செய்ய நான் தயாரில்லை எண்டதில்லை அர்த்தம். ஆனால் கலியாணம் செய்யிறவர் என்னையும் என்ர உணர்வையும் புரிந்து கொண்டவராக இருக்கவேணும்.

"ரீச்சர் அப்படி புரிந்துகொண்டவை இல்லையெண்டு நினைக்கிறீங்களோ?"

"இல்லையெண்டு சொல்லேல்லை நிவேதி இருக்கினம். அவையளும் நடைமுறை வாழ்க்கையெண்டு போகேக்கை காலப்போக்கில இந்தச் சமூகத்தின்ர பிரதிநிதிகளாய் மாறிப்போகினம். என்ர படிப்புக்கேற்ற மாப்பிள்ளை கேட்கிற கொழுத்த சீதனத்தைக் கொடுக்க என்ர குடும்பத்தார் எப்பவும் தயார்தான். ஆனால் கட்டுக்கட்டாய் காசுகொடுத்து கலியாணம் செய்ய நான் தயாராயில்ல. பத்தாம் வகுப்புப் படிக்காத ஒரு சாதாரண கமக்காரனைக் கட்டக்கூட நான் தயார். ஆனால் என்னைப் புரிஞ்சுகொண்டு, எந்தவிதத் தாழ்வுச்சிக்கலும் இல்லாமல் அவர் என்னோட வாழ்க்கை நடத்தத் தயாரா?"

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நினைவில் நிறைந்த ....

சகோதரர்களுக்கும் ஏதாவது கூற நினைத்திருப்பாளோ? அவர்களைக்



**கடற்கரும்புலி**
**கப்டன் கலைவள்ளி**
கசிந்தா ஆறுமுகம்
அராலி கிழக்கு
பிறப்பு:–1976. 06. 29
வீரச்சாவு:–1997. 03. 24

காணாமலேயே போவதில் மிகுந்த துயரமாக இருந்தது. அதையேதான் அவளுடைய தோழிகளிடமும் சொல்லிப் பிரிந்தாள்.

எதற்கெடுத்தாலும் உணர்ச்சிவசப்பட்டு அழுவது அவளிடமிருந்த தனிக்குணம். அவளிடமிருந்த குழந்தைத்தனங்களில் அந்தப் பண்பு அழியவேயில்லை. அவளை அறிமுகப்படுத்துவதற்கு இந்தக் குணத்தை முன்வைத்தே பெரும்பாலான போராளிகள் அடையாளம் சொல்வார்கள்.

அவளது அழுகையின் உச்சக்கட்டம் அதுவாகத்தான் இருக்கவேண்டும்.

அது ஒரு ஒன்றுகூடல். அந்த இடத்தினை பெண், ஆண் கரும்புலிகள் கரிய உடையில் நிறைந்திருக்க, அந்த இடம் அக்கணத்தில் அமைதியாக இருந்தது. அதற்குக் காரணம் பொறுப்பாளரிடமிருந்து கேட்கப்பட்ட கேள்வி. இல்லை வேண்டுகோள். "யாராவது உங்களது படகினைப் (பெண் கடற்கரும்புலி மேஜர்) பாரதிக்கு விட்டுக் கொடுங்கள்" என்று பொறுப்பாளர் எல்லோரிடமும் கேட்க ஒருவரும் மூச்சு விடவில்லை. எல்லோரும் நான்முந்தி நீ முந்திப் போய் வெடிக்கவேண்டும் என்று நிற்கும்போது விட்டுக்கொடுப்பதாவது........

ஒருவருமே விட்டுக்கொடுக்காத நிலையில் கடற்கரும்புலிகள் சிறப்புத் தளபதி எல்லோரையும் ஒருமுறை பார்த்துவிட்டு, சின்ன உருவமான கலைவள்ளியைச் சுட்டிக்காட்டி

"நீங்கள் உங்கள் சந்தர்ப்பத்தை பாரதிக்கு விட்டுக்கொடுங்கோ" என்று கூற, கலைவள்ளி "நான் மாட்டேன்" என்று கூறி அழுத அழுகை....... அங்கு கூடியிருந்த எல்லோரும் பார்க்க குழந்தைபோல் நின்றபடி காலைத்தூக்கி அடித்து அடித்து அழுத அழுகையை ஒருவரும் மறந்திருக்க மாட்டார்கள். அந்தச் சம்பவத்தைச் சொல்லித்தான் தோழிகள் கலங்குகின்றனர். அந்த வகையில் அவளது அழுகை பிரபலமாகியிருந்தது. பாரதியின் சண்டைக்கு கலைவள்ளி படகு கொண்டு போனாள்.

இடையில் ஏற்பட்ட பாரிய இயந்திரக்கோளாறினால் அவளது படகு இடையிலேயே திரும்பவேண்டி வந்தது. சென்ற படகுகள் திரும்பி வரும்வரை சாப்பிடாமல் கரையில் நின்றபடி அவள் அழுதது இன்னும் எங்கள் நினைவுகளில்.........

கரும்புலிக்கான பயிற்சிகள் எல்லாம் முடிவுற்ற நிலையில் தலைவருடன் நின்று படமெடுத்த சந்தர்ப்பத்தில் தலைவரின் இடுப்புக்குச் சற்று மேலாகப் பக்கத்தில் நின்ற கலைவள்ளியைப் படப்பிடிப்பாளர்கள் படமெடுக்க ப்பட்டபாடு.........

"போட்டை றோபோதான் இயக்குது என்று எதிரி நினைக்கப்போறான்" என்று தலைவர் கூற கலைவள்ளிக்கோ பெரும் கவலை.

"அண்ணையோடு நின்று எடுக்கிறபடம் நல்லாய் வருமோ"

'ஓயாத அலைகள்' சண்டை முடிந்த பின்புதான் அவளுக்கும் படகு கொடுக்கப்பட்டது. அது அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. படகில் அவள் எப்போதும் நல்ல கவனம். கரும்புலிகள் எல்லோரும் அப்படித்தான். அப்படகினை ஒரு கோயில்போல் வைத்திருப்பார்கள்.

இலக்குக்காக அலைந்த நாட்களிலும் நீண்ட கடற் சண்டைகளிலும் கலைவள்ளி சுறுசுறுப்பாகச் செயற்பட்ட இனிய போராளி. கடற்கரும்புலிகள் வானதியும், கலைவள்ளியும், தமிழ்மாறன், நாவலன், சுகுணனும் போய்முடிந்த அந்தக் கடற்சமர் மறக்க முடியாதது.

1997. 03. 24 அன்று எதிரிக்குப் பெரும் அடியைக்கொடுத்த அந்தச்சண்டையோடு கலைவள்ளியும் போய்முடிந்தாள். அவளை அலைகள் அள்ளிச்சென்றிருக்கும். ✷

# யுத்தத்தின் முடிவு?

"விடுதலைப் புலிகளுடனான யுத்தம் எப்பொழுது முடிவுக்கு வரும்?" இதுவே இன்று சிறிலங்காவில் எழுந்துள்ள முக்கியமான கேள்வியாகும். ஏனெனில், சிறிலங்காவில் தீர்க்கப்பட வேண்டிய சகல நெருக்கடிகளுக்கும் யுத்தத்தின் பின்னரே முடிவு சாத்தியமாகும் என சந்திரிகா குமாரதுங்க அரசு கூறி வருகின்றது. 19–08–97 அன்று ரூபவாகினியில் பேட்டி அளித்த ஜனாதிபதி சந்திரிகாவும் அதனையே ஊர்ஜிதம் செய்கின்றார். "யுத்தம் முடிவடையும் வரை, வரவு–செலவுத்திட்டத்தில் பாவனையாளருக்கு பொருளாதார ரீதியில் நிவாரணங்களை அளிப்பதென்பது கஷ்டமே" என அவர் அதில் தெரிவித்திருந்தார். இதேவேளை, அரச தரப்பினரின் வாக்குறுதிகளில், "யுத்தம் இவ்வாண்டின் இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவரப்படும்" என்பது முக்கியமானதாகவுள்ளது. இவ்வாக்குறுதியினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த உட்பட அரச தரப்பினர் பலருமே கூறிவருகின்றனர். ஆனாலும், இடைக்கிடை விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படும் வரை யுத்தம் தொடரும் எனவும் அவர் கூறத்தவறுவதில்லை. இந்த வகையில், யுத்தமானது இவ்வருட இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்ற வாக்குறுதியில் சற்றுத் தளர்ச்சி, நெகிழ்ச்சித் தன்மை இருப்பதாகவே தெரிகின்றது. ஆயினும், ஒப்பீட்டு ரீதியில் சந்திரிகா அரசைப் போன்று முற்று முழுதாக தமது கவனத்தையும், வளத்தையும் யுத்தத்தில் ஈடுபடுத்திய அரசு எவையும் இல்லை என்றே கூறுதல் வேண்டும். அந்தளவுக்கு யுத்தத்தில் சந்திரிகா அரசு ஆர்வமாகவுள்ளது. அதற்கேற்றால் போல், பொருளாதார வளங்களில் பெரும்பாலான வற்றை யுத்தத்திற்கு அது பயன்படுத்தி வருக்கின்றது. இந்த வகையில் பார்க்கையில் இவ்வாண்டுக்குள் யுத்தத்திற்கு முடிவு காணப்படும் என்றே சிறிலங்கா மக்கள் குறிப்பாக சிங்களவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்றே கூறலாம். அதற்கேற்றால் போல், அரச தரப்பினரும் போர் முறைச் செய்திகளில் பெரும் வெற்றிகள், சாதனைகள் ஈட்டப்படுவதாகக் கூறிக்கொண்டு வந்ததோடு, இன்றும் யுத்தத்தில் பெரும் பகுதி முடிவுற்றுவிட்டது என்ற ரீதியில் 80 வீதம், 85 வீதம் முடிவுற்றுவிட்டது எனவும் புள்ளிவிபரங்களை வெளியிட்ட வண்ணமுள்ளனர். ஆனால், யுத்தக்கள நிலைவரம் அவ்வாறு இருக்கின்றதா என்றால், இல்லை என்றே கூறவேண்டும். அதாவது, போர் 85 வீதம் முடிவுற்றது போன்றதொரு கள நிலவரம் தற்பொழுது இல்லை. வடக்கு– கிழக்குப் போர்முனை தற்பொழுதும் மிகவும் சுறுசுறுப்பானதாக இருப்பதோடு, சிறிலங்கா அரசு தரப்பு எதிர்பார்ப்பது போன்று அதனால் போரை வழிநடத்திச் செல்ல முடியாதும் உள்ளது. இதற்கு 'ஜயசிக்குறு' நடவடிக்கை சிறப்பான உதாரணமாகும். அதாவது, இப்படை நடவடிக்கையானது அரசதரப்போ அன்றி இராணுவத்தரப்போ எதிர்பார்த்தது போன்று அல்லாது மிகக்கடுமையாக உள்ளது என்பது வெளிப்படையானது. இந்நடவடிக்கையில் இராணுவத்தரப்பு பெரும் இழப்புக்களைச் சந்தித்தது மட்டுமல்ல. தமது இலக்கை எட்டமுடியாத நிலையிலும் உள்ளது. இதன் காரணமாக இப்படை நடவடிக்கை குறித்து அரசால் உறுதியாகப் பேச முடியாத நிலையும் உருவாகியுள்ளது. அதாவது, 'ஜயசிக்குறு' படைநடவடிக்கை எப்பொழுது முடிவடையும் என்பதை அரசதரப்பால் ஊர்ஜிதப்படுத்தமுடியவில்லை. இலக்கு எட்டப்படும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும் என்பது ஒரு திட்டமிட்ட இராணுவ நடவடிக்கை குறித்த தெளிவற்ற பேச்சாகும். ஆனால், இதைத்தவிர அரச தரப்பால் எதையுமே பேசமுடியாது என்பதே யதார்த்தமாகும். ஏனெனில், இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து நூறு நாட்கள் கடந்த நிலையிலும், 12 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஒரு சந்தியைப் பிடிப்பதற்கு இராணுவத்தரப்பினால் இயலாதுள்ளது. இந்நிலையில் எவ்வாறு இந்நடவடிக்கையின் காலத்தை அரசால் நிர்ணயம் செய்ய முடியும்? ஆனால், ஒரு படைநடவடிக்கையை கால நிர்ணயத்துடன் முடிக்க இயலாத நிலையிலுள்ள சந்திரிகா அரசு இவ்வருடத்திற்குள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாகவும், புலிகளை முற்றாகத் தோற்கடித்து விட முடியும் எனக் கூறுவதும் எவ்வளவு மோசடித்தனமானது?

இது, சந்திரிகா குமாரதுங்க தேர்தலின் போது வழங்கிய *'வானத்தை வில்லாக வளைக்கும்'* வாக்குறுதிகள் போன்று அல்லாது வேறென்ன? ✷

# இனவாத அரசின் .........

இதற்கு மேலாகத் தப்பியோடியவர்கள் திரும்பி வரும் பட்சத்தில் அவர்கள் முன்னர் வகித்த பதவிகளை தொடர்ந்தும் வகிப்பர் எனவும் உறுதி கூறப்பட்டது. இவ்வாறு இராணுவச் சட்டவிதிகளுக்கு மாறான வகையிலேயே யுத்தத்திற்கு என அரசாங்கம் நடந்து கொண்டுள்ளது. இந்த நிலையில் நிதி மோசடி செய்த படைத்துறை அதிகாரிகளையோ அன்றிப் படுகொலை செய்த அதிகாரிகளையோ அரசாங்கம் கண்டிக்கும் என்றோ, பதவி நீக்கம் செய்யும் என்றோ, அல்லது பதவி நிலை இறக்கம் செய்யும் என்றோ எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அரசாங்கத்தைப் பொறுத்து யுத்தம் தங்கு தடையின்றி நடத்தப்பட வேண்டும். யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும். அதற்கு இனப் படுகொலையைக் கூட வழிமுறையாகக் கொள்ளலாம். இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பெரும் படுகொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்களை நாட்டின் கதாநாயகர்களாக்க முற்பட்டதென்றே கூறலாம். ஒரு வகையில் பார்த்தால் இவர்களே அரசாங்கத்திற்குத் தேவையானவர்களாகவும் உள்ளனர். இதனை நிரூபிப்பவர் போலவே சிலசமயம் கொலைகாரர்களையே நீதிபதியாக்கவும் சந்திரிகா அரசு அறிவித்திருக்கின்றது எனலாம். அதாவது இராணுவம் புரிந்த படுகொலைகள் பாலியல் வல்லுறவுகள் என்பவற்றை விசாரிக்கும் பொறுப்பை அரசு இவர்களிடம் ஒப்படைத்து உள்ளது. ஆனால் இராணுவத்துடனான இப்போக்கானது தற்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டதொன்றல்ல. சந்திரிகா ஆட்சி ஆரம்பமானதில் இருந்தே நடைபெற்றுவரும் ஒன்றானது. ஆரம்பத்தில் இராணுவ தலைமைப்பீடத்துடன் இந்த விடயங்களில் முரண்படுவது போன்று சந்திரிகா அரசாங்கமானது காட்டிக் கொண்டாலும் அதற்கு எதிரான நடவடிக்கை எதையும் அது மேற்கொள்ளவில்லை. அண்மையில் கூட இராணுவத்தில் பலருக்குப் பதவி உயர்வுகள் சந்திகா அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பதவி உயர்வுகள் ஜயசிக்குறு நடவடிக்கைகளில் மனத்தளர்ச்சி அடைந்துள்ள அதிகாரிகளுக்கு உற்சாகம் ஊட்டும் நடவடிக்கையேயாகும். இந்த அளவில் இராணுவத்திற்கு உற்சாக மூட்டுவதும், வெற்றிகளைக் கொண்டாடுவதும் போரைத் தொடர்வதுமே சந்திரிகாவின் குறிக்கோளாகும். மேலும், சந்திரிகா அரசின் ஊழலானது இன்று தனியாக அதிகாரிகள் மட்டத்தில் மட்டுமல்ல அரசியல் உயர்மட்டத்திலேயும் பரவியுள்ளது. அதுவும் குறிப்பாக ஆயுதக் கொள்வனவு விவகாரத்தில் பெரும் அரசியல் தலைவர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துவிட்டு அரசியல்வாதிகளை அதிலிருந்து விலத்தி விடுதல் என்பது இலகுவில் சாத்தியப் பாடானது அல்ல. இந்த நிலையில் தான் சந்திரிகா அரசானது ஊழலைக் கண்டும் காணாதது போன்று உள்ளது. அதிலும் இராணுவ வெற்றி குறித்து அரசு கொண்டுள்ள ஆர்வமானது இராணுவ அதிகாரிகளைக் குற்றம் சாட்டவோ அன்றித் தண்டனைக்குள்ளாக்கவோ அன்றி அவர்களை மனஸ்தாபப்படுத்தவோ அது விரும்பவில்லை என்பதே உண்மையாகும். அத்தோடு அவர்களுக்கு மேலும் பல சலுகைகளையும் பதவி உயர்வுகளையும் வழங்கவே அரசாங்கம் முனைகிறது. ஏனெனில் அரசுக்கு தேவையான நண்பர்கள் அவர்களாகவே உள்ளனர். ✷

# இடம்பெயர்ந்து வாழும் மக்கள் நிவாரணப் பணிகளுக்கான புதிய திட்டங்கள்

சிறிலங்கா அரசின் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளால் தமது சொந்த மண்ணிலிருந்து பாதுகாப்புத்தேடி இடம்பெயர்ந்து தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களின் உடனடி, நீண்டகாலத் தேவைகளை கவனத்திற் கொண்டு தமிழீழத்திற் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல புதிய விசேட திட்டங்களை ஆரம்பித்துள்ளது.



இத்திட்டங்கள், ஆதரவற்ற குழந் தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள் ஆகியோரை பாதுகாத்து அவர்கள் சமூகத்தில் மற்றையவர்களைப் போல் ஆரொக்கியமான வாழ்வுபெறவேண்டு மென்பதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப் படுகின்றன.

இந்நோக்கின் விசேட திட்டங்களாக ஆதரவற்ற வயோதிபர்களைப் பராமரிக்கும் "முதியோர் பராமரிப்பு இல் லம்" மூன்றுவயதிற்கு கீழ்ப்பட்ட ஆதரவற்றகுழந்தைகளை பராமரிக்கும் "குழந்தைகள் பராமரிப்புஇல்லம்" வீதியோரங்களிலும் பொது இடங்களிலும் உணவின்றி பாடசாலைகளுக்கும் செல் லாமல் தமது கல்வியைத் தொடரமுடியாது எதிர்காலம் கேள்விக்குறியாக வாழும் சிறுவர்களின் எதிர்காலத்தை ஒழியாக்கும் "இனிய வாழ்வு இல்லம்" ஆதரவற்று வாழும் பெரியவர்களை பராமரித்து பாதுகாக்கும் "ஆதரவற்றோர் பாதுகாப்பு இல்லம்" மனநோயாற் பாதிக்கப்பட்டவர்களை பராமரித்து பாதுகாக்கும் "உளவளத் துணை நிலையம்" ஆகியவற்றை ஆரம்பித்து செயற்படுத்தி வருகின்றது. இத்துடன் ஏற்கனவே ஆதரவற்று இருந்த சிறுவர்களுக்காகவும் வறிய மாணவர்களுக்காகவும் "காந்தி நிலையம்" "குருகுலம்" ஆகிய சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா அரசால் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணம் வெட்டப் பட்டிருப்பதும் வறுமை, வரட்சி, வெள்ள நிவாரணங்கள் நிறுத்தப்பட்டிருப்பதும் கடல் வலயத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படாதிருப்பதும் நாம் அறிந்ததே. இன்றைய இக்கால கட்டத்தின் சூழ்நிலையில் மேற் குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் இவ் இல்லங்களை அவசியம் ஆரம்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

**நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டங்கள் தேவைக்கேற்ப தொடர்வதற்கு புலம்பெயர்ந்து வாழுகின்ற எம்மவர்களின் உதவி தேவை என்பதை தாயகத்திலிருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உரிமையுடன் வேண்டி நிற்கிறது.**

கடந்த ஜூலை 15ம் நாளிலிருந்து துயர் துடைப்பு திட்டமென்ற புதிய திட்டத்தை தாயகத்தில் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்து நடாத்தி வருகின்றது.

## துயர்துடைப்பு செயற்பாடுகள்

★நிவாரணம் கிடைக்காத மக்களுக்கு நிவாரணம் கிடைக்க ஆவன செய்தல்.

★ மாணவர்களுக்கான திட்டத்தின்படி பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு உடை கல்வி உபகரணங்கள் போன்றவற்றை வழங்கல், அல்லது அவர் களை "காந்தி விடுதி" "குருகுலம்" போன்ற இல்லங்களுக்கோ கல்விச் சேவை நிலையத்திற்கோ அனுப்புதல். இத்துடன் பின்தங்கிய பாடசாலைகளில் மதிய உணவுக்கான ஏற்பாடுகள் செய்தல்.

★போசாக்கில்லாத குழந்தைகளுக்கு போஷாக்கு புனர்வழ்வு நிலையம் அமைத்தல்.

★முன்பள்ளி செல்லாத மாணவர்களை இனங்கண்டு முன்பள்ளி அமைக்க ஆவன செய்தல்.

★சேரிப்புறங்களில் வீட்டுத்திட்டங்களை அமைப்பது அல்லது பழைய வீட்டுத் திட்டங்களைபராமரித்தல்.

★பாடசாலைகளிலும் குடியிருப்புகளிலும் குடிநீர்த் தேவைகளை நிவர்த்தி செய்தல்.

★தொற்றுநோய்கள் பரவாது தடுத்தல்.

★தொழில் . அற்றவர்களை இனங்கண்டு தொழில் வழங்க ஆவன செய்தல்.

★இடம் பெயர்ந்தோர் முகாம்களைப் பராமரித்தல்

★கல்வி சுகாதார ரீதியான செயற்பாடுகளை ஒழுங்கமைப்பித்தல்.

---

கடந்தவாரம் கிடைத்த தகவற்படி தமிழர் புனர் வாழ்வுக் கழகம் வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடமாடும் வைத் தியசாலையொன்றினை அடிப்படை மருத்துவ சேவைகளுக்காக பயன்படுத்து கிறார்கள் .

அன்பார்ந்த தமிழ் மக்களே! சொந்த மண்ணில் எம் மக்களின் நொந்த நிலையை எண்ணிப் பாருங் கள். காலத்தின் தேவையை அறி ந்து இன்ற நாம் உதவத் தவறின் எம் இனத்திற்கு பெரும் துரோகம் இழைத்தவர்கள் ஆவொம். சிறுதுளி பெருவெள்ளம். இன்னலுறும் எம்மக்களுக்கு நாம் அளிக்கும் சிறியளவு பணம் அவர்களின் நல்வாழ்விற்கு பெரும் உறுதுணையாகும். எனவே தாமதியாது உதவுங்கள்.

மேல்திக தொடர்புகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (பிரித்தானியக் கிளை)

**Registered Charity No. 1010029 70, Hoe Street, Walthamstow London E17 4SA** தொலைபேசி: 0181 520 5876

## அல்லலுறும் மக்கள் துயர் நீங்கிட துயர்துடைப்பு முகாமை நாடுக! தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மக்களிடம் கோரிக்கை

பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வை பாழாக்காது குழந்தைச் செல்வங்கள் தெருவோரங்களிலும், வாசல் அண்டைகளிலும் பிச்சை கோரும் இழிநிலை செயற்பாடுகளுக்கு அனுமதியளிக்காது – துயர்துடைப்பு முகாம்களுடன் தொடர்பு கொண்டு வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ளுமாறு பெற்றோர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

<u>'பல்வேறு அனர்த்தங்களின் மத்தியிலும் வாழும் தமிழ் மக்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்'</u> எனும் தலைப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:

சிறீலங்கா அரசின் தற்போதைய <u>திட்டமிட்ட</u> போர்க்கால நடவடிக்கைகளின் அனர்த்தங்களின் அவலங்கள் மத்தியில் இன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் சொல்லொணாத் துன்ப துயரங்களை தமது வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அனுபவித்து வருகின்றதை மக்களாகிய நீங்கள் நன்று அறிவீர்கள்.

தற்போதைய இக்கட்டான இந்தக் காலப்பகுதியில் கஷ்டப்படுகின்ற மக்களிடையே சமூகப் பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கும் நோக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் பல துயர் துடைப்பு முகாம்கள் உருவாக்கப்பட்டு, அல்லலுறும் மக்களின் துயரைப் போக்குவதற்கான துயர் துடைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வேலைத் திட்டங்களின் முக்கிய அம்சமாக எதிர்கால நல்வாழ்வின் சுபீட்சத்துக்கு தமது இளமைப் பராயத்தில் கல்வி கற்க வேண்டிய பள்ளி வயதில் தெருவோரங்களிலும், வீட்டுக்கு வீடு வாசலண்டைகளிலும் பிச்சை கோரித்திரியும் இளம் சிறார்களின் ஒளிமயமான எதிர்கால நல்வாழ்வுக்கும், குடும்ப கஷ்ட சூழ்நிலைகளினாலும், பெற்றோர் / உறவினர்களின் எவ்வித கவனிப்புகளுமின்றி அறிவிருந்தும் ஆற்றலிருந்தும் தமது கல்வியை தொடர முடியாமலிருக்கும் இளம் சந்ததியினரின் கல்வி மேம்பாட்டுக்கும், தமது வயோதிப நிலையில் வாழும் உதவிகளற்ற நிலையில் கவனிக்க யாருமற்ற அல்லல்படும் முதியோருக்கான பராமரிப்புக்குமென தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் முக்கியமான துயர்துடைப்புத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அன்பான பெற்றோர்களே / நலன்விரும்பிகளே! உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வைப் பாழாக்காது உங்கள் குழந்தைச் செல்வங்கள் தெருவோரங்களிலும், வாசல் அண்டைகளிலும் பிச்சை கோரும் இழிநிலையான செயற்பாடுகளுக்கு நீங்கள் ஒருபோதும் அனுமதியளிக்காது செயற்படுங்கள். உங்கள் அவலங்களைப் போக்க தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் பின்வரும் துயர் துடைப்புத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- பிச்சை கோரி தெருவோரங்களிலும் வீடுகளிலும் நடமாடும் பிள்ளைகளையும், கவனிக்க யாரின் துணையில்லாத பிள்ளைகளையும் பொறுப்பெடுத்து அவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் ஏற்படுத்தல்.
- பாடசாலைக்குச் செல்ல வசதியற்ற பிள்ளைகளுக்கான உடை, உணவு, கல்வி உபகரணங்கள் வழங்கல்.
- மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான கல்விச் சேவை நிலைய கல்வி வசதிகள்.
- யுத்தத்தினால் தாய், தந்தையரை இழந்த நிலையிலுள்ள ஆதரவற்ற பிள்ளைகளுக்கான பராமரிப்பு இல்லங்கள்.
- யுத்தத்தினால் தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளுக்கான ஆமிரம் குழந்தைகள் தத்தெடுக்கும் செயற்பாடுகள்.
- வயோதிப நிலையில் யாரின் கவனிப்புக்கள் ஏதுமற்று அல்லல்படும் முதியோருக்கான முதியோர் இல்ல வசதி.

இவற்றிற்கமைய பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள சகல மக்களும் தாம் வசிக்கும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள துயர் துடைப்பு முகாம்களுடன் தொடர்பு கொண்டு இதற்கான மேலதிக விபரங்களைப் பெற்று வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ளுமாறு தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினரால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ✷

www.tamilarangam.net






## தணியும் தாகம்

கைநிறையத் தண்ணீர் அள்ளி
தவித்த விடாய்க்கு அவள்
தண்ணீர் தந்தாலும்
தணியுமோ புலிவீரன் தாகம்?
தணியாதே!
தாயகம் மலர்ந்து விட்டால்
அன்று தணியும் அவன் தாகம்!

- திருமதி செல்லம்மா தம்பிப்பிள்ளை, டென்மார்க்.

## நிரந்தரப் புன்னகை ஒன்றுக்கே....

கையள்ளி நீர் குடிப்பதுவும்
பிடியள்ளி உணவுண்பதுவும்
மெய்வருத்தி நீங்கள்
போர்க்களத்தில் பொருதுவதும்
பகையை முடித்துவிட
இன்னுயிர் நல்குவதும்
நம் சுதந்திரத்தின்
புன்னகை ஒன்றிற்கே!

- அட்ஷஜன் சரவணா, டென்மார்க்.



## பங்களிப்பு

நீரும் அருந்தாமல் போர் நடத்தும் புலிகள் அங்கு
யாரும் அறியாமல் பகை முடிக்கும் படையும் உண்டு
ஊரும் உறவும் விட்டுப் பாரெங்கும் பறந்து வந்து
வாழும் தமிழா மறப் போரில் உன்பங்கெது இங்கு?

- க. சிறிபாஸ்கரன், யேர்மனி.

## பகைவன் வழிபார்த்து

பகைவன் வழிபார்த்து பதுங்கியுள்ளார்
பசியாற நேரமில்லை
பையிலுள்ள பண்டத்தை
படைத்தோழன் பகிர்ந்தூட்டும்
அடங்காத பாசமிது
எங்கள் புலிவீரர் நேசமிது!

- மலரவன், சுவிஸ்.

## உணர்வின் கரங்கள்

விடுதலை தாகம் தீர்த்திட
விரையும் புலி வீரனே!
உனது தாகம் தீர்த்திடும்
இந்த உணர்வுக் கரங்கள்
உரிமைத் தாகம் தீர்த்திட
பிறந்த வீரக்கரங்கள்!

- பாலசிங்கம் முருகதாசன், யேர்மனி.

## தணியாதே உன் தாகம்

தமிழின விடிவிற்காய் பகலிரவாய்
கண்விழித்துக் காவல் நிற்கும்
ஈழத்தின் காவல் தெய்வங்கள் நீங்கள்!
தரணியில் தன்மானம் காக்கும்
உன் தமிழீழத் தாகத்தினை இந்த
இருகை தண்ணீர் தணித்துவிடுமா?
தணியாதே, தணியாதே உன்தாகம்
ஈழமதை மீட்கும் வரை......!

- பருத்தியூர், சிறிஸ், யேர்மனி.

## யாகம்

இதோ!
இதையாவது அருந்து!
யாகம் தொடங்கிவிட்டது,
இனித்
தாகம் தணிக்கவும்
எண்ணம் உனக்கேது!

- சு. முரளிதரன், யேர்மனி.

## மானிட தெய்வங்கள்

களத்தில் ஆடிக் களைத்தனையோ...
காவல் காக்க விழித்தனையோ...
காவிய நாயகன் ஆணையிட
காலனைத் துரத்த நின்றனையோ...
காட்டில் இருந்து காவல் செய்யும்
மானிடத் தெய்வத்திற்கு
இருக்கை தேடி பருக்கை கொடுக்க
இன்னொரு புலி வந்ததுவோ!

- சி. அருள்மோகன், யேர்மனி.

## நம் தாகம்

காடும் கரம்புந்தான் வீடா நமக்கு
மரமும் கொம்பும் கூட நம்வீடே!
அவனியில் ஆருக்கும் உண்டு
ஆகாரம் உண்ண ஒருவேளை -ஆனால்
நமக்கு அது வேண்டாம்,
நம்நாடு நம்கையில் காணும்வரை!

- வரதன், அவுஸ்திரேலியா.

## வாசகர் கடிதம்

**அன்புடனும் மதிப்புடனும் - களத்தில் ஆசிரியர் அவர்கட்கு,**

தங்களது ஆக்கபூர்வமான தாய் மண்ணின் நிகழ்வுகள் அடங்கிய களத்தில் பத்திரிகையை தவறாமல் படித்து வருகின்றேன்.
நாட்டு மக்களுக்கு, வெளிநாட்டிலுள்ள நம் நாட்டு மக்கள் ஆற்றவெண்டிய கடமைகளை (புனர்வாழ்வுக் கழக மூலம்) நன்றாக எடுத்துரைத்து வருகிறீர்கள்.
உண்மையில் அவைகளைப் படித்து உணர்ந்து நாட்டுப் பற்றுடன் எம் நாட்டு மக்களாகிய நாம் செயற்பட்டால் எம் தமீழம் வெகு விரைவில் விடுதலை பெற்று சுயமாக வாழ வழி பிறக்கும் என்பது உறுதி. நம் நாடு வளம் பெற என்றும் கை கொடுப்போம்.
இத்துடன் சென்ற வாரம் களத்தில் பத்திரிகையில் உள்ள படத்திற்கான கவிதை வரைந்து அனுப்பியுள்ளேன்.
தங்கள் கவனத்தில் கொண்டு தகுதியிருப்பின் வெளியிடுவீர்கள் என எதிர்பார்த்து விடைபெறுகின்றேன்.

வணக்கம்.

புஸ்பராணி ஜோர்ஜ், யேர்மனி.

## ஆக்கங்கள் அனுப்பிய அனைவருக்கும் நன்றி:

மணற்காடு வே. ராஜன்–இத்தாலி,
அமலா ஜெயந்தன், பொ. டொறின்–இத்தாலி, தனம்–பிரான்ஸ்,
நா. பாமினி–பிரான்ஸ்,
ரஞ்சன்–அவுஸ்திரேலியா,
சு. ஜெகதீஸ்வரன்–யேர்மனி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சூரியக் குழந்தை

– மேஜர் பாரதி

மானுட இதயம்
மறுபடி ஒருதரம்
துளைமிடப்பட்டதால்
துடிப்புடன் எழுந்தது.

அன்றொரு நாள்
எண்பத்தியேழில்
எங்கள் மண்ணில்
அமைதி என்பது
வழமை போலவே
முழு நிர்வாணமாய்
மேடையேறியது.

அமைதி முகமூடி
அறிந்திடா மனிதர்
திரை விலகுதற்காய்
நிரை நிரையாக
திரண்டிருந்தனர்.

கணப் பொழுதுதான்
திரைவிலகிட
ஆவல் பொங்கிய
அப்பாவி முகங்கள்
குருதி வழிந்து
கோறையாய்ப் போயின.

மானுட இதயம்
மறுபடி ஒருதரம்
துளைமிடப்பட்டதால்
துடிப்புடன் எழுந்தது.

எங்கள் மண்ணில்
சுதந்திர தீபம்
சுடர் விட்டெழும்ப
உயிர் எண்ணெய்
உருகி வழிந்தது.

வழிந்ததில் ஒருதுளி
ஏந்திய இனங்கள்
இலட்சிய நெருப்பை
இதயத்தில் ஏந்தின.

திலீபன் என்ன
தமிழினத்தின் தனிமகனா?
இல்லவே இல்லை.
உலகத்தின் தோள்களில்
உலாவரும் சூரியக் குழந்தை.

கிழக்கு எமக்கு
செுியாய்ச் சிவப்பதற்காய்
இவன் குருதி
அடிவானை நோக்கி
ஆவியாய்ப் போனது.

அடிமை இருளின்
அடர்த்தி குறைந்தது
இவன் உடலிலிருந்து
விடை பெற்ற மூச்சில்
அன்றாடம் அன்றாடம்
அது கரைந்து கொள்வதால்,

காற்றிடை வெளியிலெம்
கண் முன்னாலொரு
கடத்தல் நிகழ்ந்தது.
ஒளி எனும்
பெரு வெளிச்சம்
இவன் கண்ணிலிருந்து
எம் மண்ணுக்குப் பாய்ந்தது.

மானுட இதயம்
மறுபடி ஒருமுறை
துளைமிடப்பட்டதால்
துடிப்புடன் எழுந்தது.

மனித இதயங்களே
கவனப் படுத்துங்கள்
இவன் காலடிச் சுவடுகளை.
ஏனென்றால்
அன்றைய அவனது
பாதப் பதிவுகள்தான்
புதிய பூமியின்
நீள் வட்டப் பாதை
தன்னைத்தானே
சுழற்றும் பூமியின்
சுழற்சி அச்சும்
இவனேதான்.



கால நெருப்புக்குள் இவன்
கருகுண்டு போவானா?
எப்படி முடியும்?
கால நெருப்பு இவன்
கைகளுக்குள்ளேதானே
கட்டுப்பட்டிருக்கிறது.

நாளைய உலகின்
விடியற் பொழுதில்
எல்லாமும் இவனாய்
ஆகிப் போகின்ற
நிகழ்வினை இங்கு
சூல் கொள்ள வைத்தமைக்காய்
பூமியில் பாரதம்
பொருமியபடியே
குனிந்து நிமிரட்டும்.

## அவனி துடித்தது

–ச. அதிரதன்

அன்னம் தண்ணி ஏதுமின்றி
அண்ணன் இருந்தான்
அன்னை மண்ணில் காதல் கொண்டு
தன்னை மறைத்தான்

ஊரழுத போதினிலும்
உண்ண மறந்தான்
ஊரெழுவில் பிறந்த மைந்தன்
உயிர் துறந்தான்

தேசத்தை மீட்டிடவே பசித்தீயில்
குதித்தான்–மாற்றான்
வேசத்தைக் கலைத்திடவே–ஒரு
வேள்வி தொடுத்தான்

மேகத்தை பிளந்து–ஒரு
மின்னல் பிறந்தது–மாற்றான் ஆதிக்க
மோகத்தை உடைத்து–ஒரு
பிள்ளை இறந்தது

பார்த்திருந்த வேளையிலே
பஞ்சாகினான்–அண்ணன்
பாரதத்தின் சதியினாலே
சருகாகினான்

அணுவணுவாய் அவன் சாக
அவனி துடித்தது
ஈழத்தாய் மடியில் அவன் சாய
எம் நெஞ்சு வெடித்தது.

## திலீபனே உனையென்றும் இதயத்தில் வைப்போம்!

– வேலணையூர் பாக்கியன்

கண்ணாடி போட்டமுகம் –எப்போ
கண்டிடுவோம் ஈழமதை என்றமனம்
நின்றாடுதடா நினைவில்
எதிரியினை
திண்டாட வைத்த எங்கள் திலீபனே–நீ
நின்றாடும் களமெல்லாம்
உன்வீரம் பார்த்தோம்–நின்
நினைவாலே வாழ்ந்தோரின்
விழிநீரைச் சேர்த்தோம்
உன்னாலே தமிழ்வாழும்
என்று உன்பிரிவேற்றோம்
உயிர்தமிழுக்கு கொடுத்ததினை
கண்முன்னே கண்டோம்
பத்தென்ன,
நூறாண்டு போனாலும் என்ன
இதயத்தில் உன்நினைவை
எந்நாளும் வைப்போம்.

## மேதினிக்கு நீவெளிச்சமாயினாய்

மேதினிக்குநீ வெளிச்ச மாயினாய்
மெழுகு வர்த்தியாய் உருகிப் போயினாய்
வேத னைக்குநீ விடிவி வேண்டினாய்
விண்ண வர்க்குயர் விருந்து மாயினாய்
சாத னைக்குநீ வேளை காட்டினாய்
சாவி னுக்கணி மாலை ஆயினாய்
தீதி னையெதிர் தியாகி யாயினாய்
தீர்வி னுக்குயிர்ப் பணய மாக்கினாய்!

# நோர்வே ஒஸ்லோவில் நடைபெற்ற ‘சுதந்திர தாகம்’ நிகழ்வு



தமிழீழத் தேசியக்கொடியை கரங்களில் பற்றியவாறு, நெஞ்சை நிறைத்திருக்கும் சுதந்திரதாகத்தை கலைவடிவங்கள் மூலம் வெளிப்படுத்தி நிற்கும் நோர்வே வாழ் தமிழீழக் குழந்தைகள்.





# யேர்மனி தமிழ் மாணவர் அமைப்பினால் (த.மா.அ) நடாத்தப்பட்ட ‘மாவீரர் ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டி’ நிகழ்வுகள்.

போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்ற வீரர் ஒருவர், த.மா.அமைப்பின் பொறுப்பாளரிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெறும் போது....




அணிவகுப்பு மரியாதைக்குத் தயாராகவுள்ள தமிழாலய மாணவிகள்...



போட்டிகளில் கூடுதலான பரிசில்களை தமதாக்கிக்கொண்ட லூயூப்பற்றான் தமிழாலய மாணவர்கள்....




T.C.C Via Mariano Stabile - 49 90139 Palermo, Italy T/F: 091-611 3179

W.T.C.C Lang STR - 206 8005 Zurich, Swiss. T/F: 01/273-29-38

T.C.G Post Fach - 340251 51624 Gummersbach - 34 Germany

U.T.O., 211 Katherine Rd, London E6 1BU, UK. Tel: 0181 - 503 4294, Fax: 0181 - 470 8593

T.C.C P.C Box 1699 Vika 0110 Oslo -1, Norway T: 022-350 980 F: 22381040

W.T.C.C. 170-10 Cedarcroft Road Suite 1-L, Jamaica, New York 11432, U.S.A. Tel: 718-657-8463 Fax: 718-523-7369

L.T.T.E P.O.Box 47, 7400 HERNING DENMARK. Tel/Fax: 97-155299

T.C.C Grt. Hertoginnein - 106 2517 EL Den Haag, Nederland Tel: 070-346 1983, Fax: 070 362 5172

T.C.C 341 Rue des Pyrenees 75020 Paris, France Tel: 435 81142, F 435 81191

T.C.C Vissingebacken 11 1TR 16364 Spanga, Sweden.

T.C.C P.O.Box 375, Preston Victoria 3072, Australia T: 03-470 6441 F: 560 8224